

பல்லவன் கண்ட

பனைமலைக் கோயில்





புலவர்
ந. வெங்கடேசன்



திருக்குறள் பதிப்பகம்

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	PALLAVAN KANDA PANAIMALAIK KOIL
Author	Pulavar Na. VENKATESAN
Language	Tamil
Subject	Archaeology & History
Edition	First
Published	January 1990
Copyright holder	THIRUKKURAL PATHIPPAGAM
Paper used	White Printing 11.6 kg.
Size of the book	Double Crown 1×8
Printing Type	12 Point
No. of pages	132
No. of Copies	1,000
Printer	Amudhan Achagam, MGR Nagar, Madras—78
Binding	Board Binding
Price	Rs. 40.
Call Number	V 211, C N 90



பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்

வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன்

திருக்குறள் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்
66 அ, பெரியார் தெரு எம்ஜிஆர். நகர்
சென்னை — 600 078

முதற் பதிப்பு : ஜனவரி 1990
சுக்கில, தைத் திங்கள்
உரிமை : பதிப்பகத்திற்கு

விலை ரூ. 40.

அச்சிட்டோர்
அமுதன் அச்சகம், 66,பெரியார் தெரு
எம்ஜிஆர் நகர், சென்னை - 600 078

நூல் உருவாக்கியோர்

ஆசிரியர்	புலவர் ந. வேங்கடேசன்
ஓவியர்கள்	ஓவியக் கவிஞர் அமுதோன் ஆர். சதானந்தம்
உருவச்சு	சாமுண்டேஸ்வரி பிராசஸ் தி. நகர்
அச்சுக் கோத்தோர்	சு. செந்தாமரை, அ. சுந்தரி, உமா, போ. ரவி, மேனகா, விஜயா
அச்சிட்டோர்	எஸ்.மணி, அண்ணாமலை
அச்சகத்தார்	சு. அருள், சு. புகழேந்தி அமுதன் அச்சகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78.
புகைப்படங்கள்	பிரெஞ்சுக் கலைக்கழகம், புதுவை பாகூர் சு. குப்புசாமி, முத்து. எத்திராசன்.
முகப்பு அச்சிட்டோர்	அன்பு அச்சகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78.
மேலட்டை எழிலுறை	ரசாக், மயிலாப்பூர்
பிழைதிருத்தம்	பெ. பன்னீர் செல்வம் வெ. சுந்தரம்
நூல் கட்டமைப்பு	சு. செல்லப்பன் வளசரவாக்கம்
பதிப்பாளர்	வெள்ளையாம்பட்டு சுந்தரம், திருக்குறள் பதிப்பகம்



'வரலாற்றில் வில்லியனூர்' நூல் வெளியீட்டு விழா, ஜூன் - 1979
டாக்டர் இரா. நாகசாமி — நூலாசிரியர் புலவர் ந. வேங்கடேசன்



புதுவை அறிஞர் பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ். வாழ்த்துரை வழங்குதல்



பனைமலை
மலைக் கோயிலைப் பார்த்து
நூலாக்கத்திற்கு உரையாடுதல்

ஜூன் 1979

பதிப்பாளர்
வெள்ளையாம்பட்டு சுந்தரம்

கல்வெட்டாய்வாளர்
பாகூர் புலவர் சு. குப்புசாமி

சென்னை, பேராசிரியர்
மா. ரா. இளங்கோவன்

உள்ளடக்கம்

அணிந்துரை	VII
பதிப்புரை	1
ஆசிரியர் முன்னுரை	3
சுற்றுலாச் சிறப்பிடம் பதிப்புரை	5
அறிமுகம் 1. ஓவியக் கலை	11
அறிமுகம் 2. கோயில் கட்டக்கலை	13
பனைமலை ஊரும் வழித்தடங்களும்	17
வரலாற்றில் பனைமலை	23
கலைச் சுவடுகள்	25
இராசசிம்மன் கல்வெட்டுகள்	,,
துர்க்கை	28
துவாரபாலகர்	29
கட்டடக் கலை	30
கோயிலின் அமைப்பு	31
கோயிலின் வெளி அமைப்பு	32
படங்கள்	
எழிலார் ஓவியங்கள்,	33—36
பனைமலை ஓவியம்	42
ஓவியம் — ஊழிக் கூத்து	43
அம்மன் கோயில், முன்மண்டபம்	44
திருச்சுற்று மண்டபம், செப்புத் திருமேனிகள்	45
இடைக்காலக் கல்வெட்டுக்கள்	46
பெருமாள் கோயில், உடையார்கோயில்	47
ஆ தீண்டு குற்றி	48
நடுகல் நாயகம்	49
கல்மேல் எழுத்தரைக் கண்டு கொள்வீரே!	50
படங்கள்	51—60
பல்லவர் தோற்றம்	61
பல்லவர்கள் யார்?	62
பயன் விளைந்தது	63
பல்லவர்தம் பட்டியல்	64

கி.பி. 556 முதல் 903 வரை
அரசாண்ட பல்லவர்கள் 65
சிம்ம விஷ்ணு 66
மகேந்திர வர்மன் I 67
நரசிம்ம வர்மன் I 69
பரமேசுவர வர்மன் 71
நரசிம்ம வர்மன் II 72
எழிலார்ந்த எழுத்துக்கள் 75
புதிதாகக் கண்ட கல்வெட்டு 76
பனைமலையில் புதிதாகக்
கண்டுபிடித்த கல்வெட்டுக்கள் 78
பிற்காலக் கல்வெட்டுக்கள் ,,
விடை உடையார்
திருவலஞ்சுழி உடைய நாயனார் 79
பனைமலைப்பேட்டை நடுகல் 80
புதிய மரபு 81
வரலாற்றில் வாழும் உண்மையாளர் 82
இரண்டாம் நந்தி வர்மன் 83
வரலாற்று வாயில்கள், சமயப் பொதுநோக்கு 83
தந்தி வர்மன் 85
நந்தி வர்மன் III 86
செப்பேடுகளில் தெள்ளாற்றுப் போர் 87
பாரத வெண்பாவில் தெள்ளாறு
நந்திக் கலம்பகத்தில் தெள்ளாறு
நிருபதுங்க வர்மன் 88
பல்லவர்காலச் சமுதாயச் சூழல் 89
அரசு வரிகள், நில அளவு 91
காசுகளில் உருவங்கள் 92
பல்லவர் காலத்து நீர்ப்பாசனம் ,,
கல்வி வளர்ச்சி 93
பல்லவர் காலத்திய சமயம் 94
பல்லவரின் கலை வளர்ச்சி 95
ஆடற்கலை 96
பல்லவ ஓவியங்கள் 98
கட்டடக் கலை 99
சிற்பக் கலை 101
இலக்கியக் கலை 102

இணைப்பு 105
கல்வெட்டுக்கள் 107—112
சொல்லடைவு 113

★

அணிந்துரை

திருமிகு டாக்டர் இரா. நாகசாமி அவர்கள்
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை முன்னாள் இயக்குநர்

பல்லவமன்னர்களில் கலைக்கடல் என்று பெயர் பெற்ற இரண்டாம் நரசிம்மன் எனும் இராஜ சிம்மனால் கட்டப் பெற்றது பனைமலைக் கோயில். இம்மன்னன்தான் காஞ்சியில் புகழ் பெற்ற கைலாய நாதராலயத்தைக் கட்டினவன். மாமல்லபுரத்துக் கலைச் செல்வங்களைத் தோற்றுவித்தவனும் இவனே.

தான் தோற்றுவித்த ஒவ்வொரு கோயிலிலும் ஒரு புதுமையைக் கண்டவன் அவன். அமைப்பிலே புதுமை; சிற்ப வடிவங்களிலே புதுமை; எழுத்துக்களிலே புதுமை எனப் புதுமையை விரும்பியவன். அவனுக்கு 'அத்யந்த காமன்' என்று ஒரு பெயர் உண்டு.

மாமல்லபுரத்துக் கோயில்களையாகிலும் சரி, காஞ்சி கோயில்களையாகிலும் சரி, அறிந்துகொள்ள வேண்டும் எனில் பனைமலைக் கோயிலைக் காணாவிடில் முழுமை பெறாது என்பது அறிஞர் கருத்து.

> பல்லவர் காலத்து ஓவியத்துக்கு எடுத்துக்காட்டாக இதுகாறும் திகழ்ந்து வந்தது பனைமலைக் கோயிலேயாகும்.

இக் கோயிலின் கட்டிட அமைப்பு ஒரு புதுமையான பாங்குடன் எழுப்பப்பட்டது. மிகவும் விரிவாகவும் நுணுக்கமாகவும் முன்கூட்டியே திட்டம் தயாரித்து, அதற்கேற்பக் கட்டப்பட்டுள்ள பாங்கை இங்குக் காண்கிறோம். கோயிலில் சிற்பங்களைக் காட்டிலும் ஓவியத்துக்கே முதலிடம் கொடுத்துள்ளான் மன்னன்.

இக் கோயிலின் கல்வெட்டில், தான் அசுவமேத யாகம் செய்தோர் வழியைச் சார்ந்தவன் என்று கூறுகிறான். கல்வெட்டின் சில பகுதிகள் மறைந்து விட்டன. ஆதலின் இக்கோயிலின் பண்டைய பெயர் என்ன என்று தெரியவில்லை. ஆனால் மக்கள் வழக்கில் 'தாலகிரீச்சுவரர்' (பனைமலை ஈசுவரர்) என வழங்கி வந்துள்ளது.

இதுகாறும் காணப்படாத கல்வெட்டுகள் சில வற்றை இந் நூலாசிரியர் கண்டு பிடித்துள்ளார். அவற்றில் கோயிலின் பெயர் தாலகிரீசுரர் என்றே தெரிய வருகிறது. இது புதிய கண்டுபிடிப்பு.

பனைமலைக் கோயிலில் மூன்று அமைப்புகள் காண்போரை மனம் குளிரச் செய்யும்.

ஒன்று, மலையின் உச்சியில் எடுக்கப்பட்டுள்ள இக் கோயில்.

இரண்டு,மலை அடிவாரத்தில்உள்ள பரந்த ஏரி, நீர் நிறைந்து விளங்கும்போது அதையும் இம்மலைக் கோயிலையும் கண்டால், 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று எண்ணத் தோன்றும்.

மூன்றாவது, மெய் சிலிர்க்க வைக்கும் ஒரு இயற்கையான கோயில் இது.

மலை அடிவாரத்தில் ஒரு குகை போன்ற அமைப்பு உள்ளது. அதன் உள்ளே ஒப்பரும் ஒரு கொற்றவையை ராஜசிம்மன் பிரதிஷ்டை செய்துள்ளான். அதன் அருகில் தனது சிவ பக்தியையும் பாறையில் பொறித்து வைத்துள்ளான்.

பனைமலை என்பது பலருக்கும் தெரியாத ஊர்தான். ஆனால் ஒரு முறை சென்றால், வாழ் நாள் முழுதும் அது நம்மை ஈர்த்துக் கொண்டே யிருக்கும். 'அங்குப் போக வேண்டும், போக வேண்டும்' என்று உள்ளம் துடிக்கும்.

அங்கு என்ன இருக்கிறது என்று தெரிந்து கொண்டு சென்றால் மிகவும் பயனுடையது அல்லவா! அதற்காக, இந்த நூலை நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம், பல ஆண்டுகளாக வெளியிடவேண்டும் என்ற ஆர்வத்தோடு முயறசி செய்து வந்தார். அறிவின்பால் கொண்ட ஆர்வம் மிக்கவர் அவர். தரமான, சிறந்த நூல் களை வெளியிடுவதையே தமது குறிக்கோளாகக் கொண்டவர்; பல இன்னல்களுக்கும் இடையே வெளியிட்டும் உள்ளவர். என்றும் நிலைத்து நிற்கும் நூல்களையே அவர் வெளியிட விழைகிறார்.

இக் கோயிலை அனைவரும் அறிந்து, அவரும் மற்ற அறிஞர்களும் பெற்ற இன்பம் எல்லோரும் பெற வேண்டும் என்ற ஒரே கருத்தில்தான் அவர் இந் நூலைக் கொண்டு வருகிறார். அவருக்குத் தமிழகம் என்றும் கடமைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமேயில்லை.

இந் நூலை நண்பர் புலவர் ந. வேங்கடேசன் யாத்துள்ளார். வரலாற்று நூல்களை எழுதுவதில் ஆர்வமும் வில்லியனூர் பற்றிய வரலாறு படைத்து மிகுந்த அனுபவமும் பெற்றவர். எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில், எளிமையான மொழி யில், இனிமையாகச் செய்திகளை எடுத்துரைக்கும் பாங்கு பாராட்டத்தக்கது.

இது போன்ற நூல்கள்தாம் ஆயிரக்கணக்கில் தமிழில் வேண்டும். ஒருசிலருக்கு மட்டும் பயன் படக் கூடிய ஆராய்ச்சி நூல் என்பதை ஒரு சிலருக்கே விட்டுவிடலாம். இது போன்ற நூல் களையே எல்லோரும் வரவேற்பர். வேங்கடேசன் அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

வாழ்க வரலாற்று நெறி.

பெசன்ட் நகர்
சென்னை

இரா. நாகசாமி





பனைமலை குன்றுடைநாதர் கோயில் காட்சிகள்







சிங்கத் தூண்கள் அமைந்த தெற்கு மேற்குப் பகுதி



விமானக் கோபுரம் ↑



கோயிற் காட்சி ↓

மதிப்புரை

திருமிகு நடன. காசிநாதன் எம். ஏ., அவர்கள்
இயக்குநர், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 600 028

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்ற முதுமொழிக்கொப்ப, சான்றோர் பலர் இப் பகுதியில் வாழ்ந்திருந்த காரணத்தாலேயே இப் பகுதி கலை வளத்திலும் சிறந்தோங்கி விளங்கியிருக்கிறது.

தமிழகத்தின் இப் பகுதி இந்தியத்திருநாட்டின் பிற பகுதிகளோடு தொடர்பு கொள்ள வசதியாக அமைந்திருந்த காரணத்தால், பிற பகுதியில் வளர்ச்சி பெற்ற கலை, பண்பாடு ஆகியவற்றின் தாக்கம் இங்கு முதலில் ஏற்பட்டிருக்கிறது.

இக்காணப் பகுதியில் ஏற்பட்டிருந்த கலை வளர்ச்சி, பல்லவர்களைத் தம் பகுதியிலும் அத்தகைய வளர்ச்சியை ஏற்படுத்தத் தூண்டு கோலாக அமைந்தது. ஆதலால்தான் பல்லவப் பெருவேந்தன் மகேந்திரவர்மன், தம் பகுதியில் அந்நாள்வரை பயின்று வந்த முறைகளை மாற்றி, கற்றளி அமைப்பதில் ஈடுபாடு கொண்டான். அதைத்தான், தொண்டை நாட்டிலே அமைந்துள்ள மண்டகப்பட்டு குடைவரைக் கோயிலில் காணப் பெறும் அம் மன்னனது கல்வெட்டு புலப்படுத்து கின்றது.

குடைவரைக் கோயில்களையும் ஒற்றைத் தளிகளையும் உருவாக்கிய வேந்தன் முதலாம் மகேந்திரவர்மன் என்றால், கட்டடக் கோயில்களை முதன் முதலில் தமிழ்நாட்டில் பரவலாக்கியவன் இரண்டாம் நரசிம்மன் என்று வழங்கப்பெறும் இராஜசிம்மன் என்று கூறலாம்.

அவன் காலத்தில் அமைக்கப் பெற்ற கட்டடக் கோயில்களை மூன்று இடங்களில் நம்மால் இன்று காண முடிகிறது. கடல்மல்லை, காஞ்சி, பனை மலை ஆகியவையே அவ்விடங்களாகும்.

கடல்மல்லை, காஞ்சி ஆகிய இரு இடங்களில் காணப்பெறும் கட்டடக் கோயில்களிலும் சிறிது மாறுதலான கட்டட அமைப்பை உடையது பனை மலையில் காணப்படும் கட்டடக் கோயில்.

முதலிரு இடங்களிலும் உள்ள கட்டடக் கோயில் கள் முழுதும் மணல் கற்களால் கட்டப் பெற்றிருப் பவை. ஆனால் பனைமலைக்கோயில் பீடம் முதல் கூரை வரை கருங்கல்லினாலும் அதற்கு மேலுள்ள பகுதி, கோயில் எழுப்புகையில் கருங்கல்லால் அமைக்கப் பெற்று, பின்னாளில் இடிபாடுற்றபோது முற்றிலும் சுதையாலும் அமைக்கப் பெற்றிருப்ப தாகும்.

இக் கோயிலை இங்கு இராஜசிம்மன் எடுப்பித்ததன் நோக்கம் என்னவாக இருக்கும் என்று சிந்திக்கும்பொழுது, 'தன் முன்னோன் மகேந்திர வர்மன் முதன் முதலில் அமைத்த குடைவரைக் கோயில் அமைந்துள்ள மண்டகப்பட்டுக்கு அருகில் தம்மால் பரவலாக்கப்படும் கட்டடக் கலைக் கோயில் ஒன்றும் அமைய வேண்டும்' என்று இராஜசிம்மன் விரும்பி அமைத்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கட்டடக்கோயில் தனக்கென ஒரு தனிக் கலை முத்திரையைப் பதித்துக் கொண்டு இலங்கும் தலை நிமிர்ந்து காட்சி தருகிறது.

'இக் கோயிலின் அருமைபற்றித் தமிழக மக்கள் சரியான வகையில் அறிந்து கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி, ஒரு கட்டுரை எழுதி அதன் மூலம் வெளிப்படுத்துங்கள்' என்று எம் அருமை பதிப்பக நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் வேண்டுகோள் விடுத்ததன் விளைவாக, எனைனால் எழுதப் பெற்று அவரால் வெளியிடப் பெற்ற 'காலச் சுவடுகள்' என்னும் நூலில், 1973 ஆம் ஆண்டிலேயே ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இக் கோயில் பற்றி ஒரு தனி நூலே எழுதப் பெறுதல் வேண்டும் என்கிற சுந்தரம் அவர்களின் வேட்கை, சுமார் பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு நண்பர் புலவர் வேங்கடேசன் அவர்கள் மூலமாகத் தற்பொழுது நிறைவு பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

ஆசிரியர், கோயிலின் அமைப்பு, கலைச்சிறப்பு, ஓவிய மேன்மை ஆகியவற்றை விரிவாக விளக்கி விட்டு, பல்லவர்களின் வரலாறு பற்றியும் குறிப் பிட்டிருப்பது, இக் கோயில் எந்த மன்னனால், எத்தகைய பாரம்பரியம் பெற்ற மன்னனால் எடுப் பிக்கப் பெற்றது என்று அறிந்து கொள்வதற்குத் துணையாக அமைந்துள்ளது. இறுதிப் பகுதியாக அங்குக் காணப்பெறும் கல்வெட்டுக்களையும் இணைத்துள்ளமை பாராட்டத் தக்கது.

நூலில் சில வரைபடங்களையும் ஒளிப் படங் களையும் சேர்த்திருப்பது இக் கோயிலைப் பற்றி அறிந்து கொள்ள விழையும் ஆர்வலர்களுக்கு அரிய விருந்தாக அமையும்.

மொத்தத்தில் இந் நூல் பள்ளி மாணவர் களுக்கும், பனைமலைக் கலைக் கருவூலத்தைக் காண வேண்டும் என்று விழைவார் அனைவர்க்கும் ஒளியூட்டும் ஒளி விளக்காக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. மாணவருலகம் மகிழ்ந்து வரவேற்கும் என்று உறுதியாக நம்பலாம்.

நடன. காசிநாதன்

ஆசிரியர் முன்னுரை

இந் நூலை எழுதும் வாய்ப்பு நான் எதிர் பாராமல் எனக்குக் கிடைத்தது. என் நண்பர் பாகூர் சு. குப்புசாமியை எழுதுமாறு நண்பர் வெள்ளையாம் பட்டு சுந்தரம் அவர்கள் கேட்டிருந்தார்கள். 1986ல் ''அகழ்வாய்வில் அரிக்கமேடு'' என்னும் நூலை நான் எழுதி, வெளியிட வேண்டும் என்று வெள்ளையாம்பட்டாரிடம் கொடுத்து வந்தேன். அச்சமயம் நண்பர் சு. குப்புசாமி எதிர்பாராமல் 1986 இல் இயற்கை யெய்தினார். என் உள்ளம் மிகமிக வேதனையடைந்தது.

பாகூர் சு. குப்புசாமியோடு எங்கெங்கு கல் வெட்டு ஆய்வு மேற்கொண்டோமா, அங்கெல்லாம் ஏற்பட்ட அனுபவங்களைக் குறித்து நூற்றைம்பது பக்கங்கள் எழுதினேன். எழுதியதை வெள்ளையாம் பட்டாரிடம் காண்பித்தேன். அவர், துள்ளிக்குதித்து, 'இது போன்ற செயலை இதுவரை யாரும் செய்யவில்லை. இது புதிய முறை' என்று மகிழ்ந் தார். காலம் செல்லச் செல்ல நண்பர் சு. குப்புசாமி நினைவு வளர்பிறையென வளர்ந்தது.

'தினமணி' பொங்கல் சிறப்பிதழில் 'குன்றுடைய மகாதேவர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன்.

அக் கட்டுரை வெளி வந்ததும் பனைமலைக் கோயிலை ஒரு நூலாக்கி மறைந்த பாகூர் நண்பர்க்குக் காணிக்கைசெய்தால் என்ன என்று என்னுள்ளம் கேட்க, உடன் செயல்படத் துவங்கி னேன். அதன் காரணமாக இன்று உங்கள் கைகளில் இவ் அழகிய நூல் அணிசெய்கிறது.

இத் துறையில் என்னையும் பாகூர் புலவர் சு. குப்புசாமியையும் ஊக்குவித்தவர் புதுவைப் பெரியார் திருமுடி ந. சேதுராமன் செட்டியார். அன்னார் என் நெஞ்சில் நின்று வழிகாட்டுகிறார். அவர் புகழ்பாடி வணங்குகிறேன். கல்வெட்டுத் துறையில் இணைந்து செயலாற்றிய செயல் வீரர் பாகூர் புலவர் சு. குப்புசாமிக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

எங்களோடு பலவிடங்களுக்கும் வந்து ஒத்துழைத்த பகூர் புலவர் அரு. அப்பாசாமிக்கும் அனந்தபுரம் கோ. கிருஷ்ண மூர்த்தி எம். ஏ., அவர்கட்கும் நன்றியுடையேன்.

பனைமலையில்கல்வெட்டு மைப்பதிவு எடுக்கும் போது உணவளித்த பனைமலைப் பேட்டை புலவர் நா. நமச்சிவாயம் அவர்களுக்கும் வில்லிய னூர் பழனிக்கும் நன்றி.

கோயில் பற்றிய செய்திகளைச் சொல்லி, திருத்தம் செய்தற்குப் பனைமலைக்கு உடன் வந்துதவிய தொல் பொருள் ஆய்வுத் துறையின் பதிவு அலுவலர் மா. சந்திரமூர்த்தி எம்.ஏ., அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களுக்கு நன்றி கூறி வணங்குகிறேன். மதிப்புரையளித்த தொல்பொருள் துறை இயக்குநர் நடன. காசிநாதன் எம்.ஏ., அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குவதில் பெரிதும் மகிழ்கின்றேன். இந்நூல் சிறப்பாக அமைவதற்காக நிழற்படங்கள் கொடுத்துதவிய புதுவை பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டுக் கழகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அக் கழக இயக்குநர் டாக்டர் பிரான்சுவா குரோ அவர்களுக்கும், மத்மா சேல்லோர்னோ அவர்களுக்கும், சமஸ்கிருதத்துறைத் தலைவர் டாக்டர் N. R. பட் அவர்களுக்கும், அதே துறையைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும், இக்கழகத்தின் செயலர், V. சீனிவாசன் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறி வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் வரலாற்று நூலைப் பொலிவோடும் பெருவிருப்போடும், பார்ப்போர் — படிப்போர் வியக்கும் வண்ணம் வெளியிடும் கவிஞர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடப்பாடு உடையேன்.

குகைக் கோயில் — கல்வெட்டுப் படத்தைக் கொடுத்துதவிய பாகூர் புலவர் சு. குப்புசாமியின் மூத்த மகன் கு. சுந்தரமூர்த்திக்கும் நன்றியுரியது.

இளமை முதல் என்னுடன் இணைந்து செயலாற்றிய செயல் வீரர் பாகூர் புலவர் சு. குப்புசாமிக்கு இந்நூலைக் காணிக்கையாக்கி நன்றியைச் செலுத்துகின்றேன்.

தமிழுலகம், குறிப்பாக மாணவருலகம் இந்நூலைப் பெற்றுப் படித்துப் பயனடையவேண்டுகிறேன்.

இத்துறையில் உள்ளம் செல்ல உதவி புரிந்த இறையருளுக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

வில்லியனூர்
புதுவை-605 110

ந. வேங்கடேசன்

சுற்றுலாச் சிறப்பிடம்!

வரலாற்றுப் பெருமை! வாழ்வியல் கடமை!

பனைமலை மலைக்கோயில்,
பல்லவன் கலைக் கோயில்!

தொன்மைமிகு தமிழக வரலாற்றில்
உண்மைமிகு பனைமலைக் கோயில்
நன்கு இடம் பெறாமல் உள்ளது.

இவ் வரலாற்று மறைப்பினை
இதுவரை யாரும் எடுத்துக் காட்டாதது
பெருங் குறையாகும்.

ஊர்ப் பெயரை ஒப்புக்குக் குறிப்பிட்டோரும்
உலகத்துக்கு அதை அறிமுகப்படுத்த
முற்பட்டாரிலர்.

ஒருவர் எழுதியதையே பின் வருவோர் பின் பற்றி வரும் பழக்கமே இங்கு வளர்ந்துள்ளது. 'புதிதாய் அறிய வேண்டும்' என்ற ஆர்வமும் கொள்வதில்லை; 'பார்த்துவிட்டு எழுதுவோம்' எனும் பக்குவமும் இல்லை. அலையாமல், அசையாமல், 'கிடைத்த குறிப்பையே பயன்படுத்தி விட்டால் போதும்' எனும் சோம்பல் நம்மவர் சிலருக்குச் சொந்தமாகிவிட்டது.

பண்பட்ட எழுத்தாளர் திரு மீ. ப. சோமு அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன் நந்தவனம் என்கிற தமது கதை நூலில், பனைமலையைச் சுற்றுலாச் சிறப்பிடமாக அமைத்து விளக்கிச் சென்றதை நான் நன்றியுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிரெஞ்சுநாட்டு வரலாற்றறிஞருள் புதுவை கல்வே கல்லூரியில் பேராசிரியராய்ப் பணி புரிந்தவர் கபிரியேல் ழுவோ துப்ரராய் என்பவர் ஒருவர். அவர்கள் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் பனை மலைக்கு நேரில் சென்று நன்கு ஆராய்ந்து வெளி யிட்ட முயற்சியே முதன்மையானது; முறையானது.

பின்பற்றி வந்த அறிஞர் பலரும் மாமல்லைக் கடற்கரைக் கோயில், கயிலாசநாதர் கோயில்கள் பற்றி மட்டும் விரிவாக எழுதினர்; 'பனைமலைக் கோயிலும் ராஜசிம்மன் காலத்ததே' என்ற சிறு குறிப்பினைத் தருவதுடன் தங்கள் ஆய்வுரையைப், பல்லவர் வரலாற்றை முடித்துக் கொள்வாரா யினர்.

ராஜசிம்ம பல்லவன் காஞ்சித் தலைநகரிலும் தனது துறைமுக நகரிலும் கலைக் கோயில்கள் கட்டும் பொழுதே, தெற்கே பெருவழிச் சாலை யோரம் உள்ள பனைமலை மலை மீதும் ஒரு கோயிலைக் கட்ட எண்ணியுள்ளான். சிறந்த இத் திட்டத்தை வரலாற்றாய்வாளர் ஏனோ தெளி வாகக் காட்டத் தவறிவிட்டனர்.

ஐம்பதாண்டுகளாகப் பனைமலையைப் பற்றி வெளி உலகுக்கு நன்கு வெளிப்படுத்தியிருந்தால், செஞ்சியுடன் பனைமலையும் சுற்றுலாத் திருவிட மாக ஏற்கப்பட்டிருக்கும். அப் பகுதி இப்பொழுது போக்கு வரத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் நன்கு முன்னேறியிருக்கும்.

சிலரின் கவனக் குறைவால். அலட்சியப் போக்கால் வரலாறு மட்டுமா பின்னடைந்தது? பல ஊர்களும் பல்லாயிரம் மக்களும் வளர்ச்சியில் பின்தங்க நேர்ந்து விட்டது. இதனை நன்கு சிந்திப்போர் வருந்தாமல் இருக்க முடியாது.

நான் பிறந்த வெள்ளையாம்பட்டுக்கு வடக்கே இரண்டு கல் தொலைவில், அனந்தபுரம் எனும் பெரிய ஊருக்கு இடையே உள்ள ஊர், பனைமலை. 1945ஆம் ஆண்டு வாக்கிலிருந்து, என் மாணவப் பருவத்திலேயே மலைமீது ஏறிக் கோயிலழகைக் கண்டு மகிழும் வழக்கம் தொடங்கியது. 1947 - 48 ஆம் ஆண்டுகளில் அனந்தபுரம் பள்ளித் தமிழாசிரியர் நடேச அய்யர் அவர்களின் வழி காட்டுதலால், கோயில படிக்கட்டுகளில் உள்ள கல்லெழுத்துக்களைக் கண்டு வியந்தோம்.

நாற்பதாண்டுகளாய், என் நெஞ்சில் சுடர்விட்ட ஆர்வமும் ஏக்கமும் இடையறாது வளர்ந்தன.

பதினாறு ஆண்டுகளுக்கு முன் தொல்பொருள் அறிஞர் நண்பர் நடன. காசிநாதன் (இப்போது தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர்) அவர் களது கட்டுரைகளைத் தொகுத்து, அவரது முதல் நூலாகக் 'காலச் சுவடுகள்' எனும் நூலை, நான் (1973இல்) பதிப்பித்து வெளியிட்டேன். அது சமயம் அவர் என் வேண்டுகோளை ஏற்றுப் பனைமலைக் கோயில் பற்றிய ஒருகட்டுரையை எழுதிச் சேர்த்தார். அப்போதைக்குச் சிறிது ஆறுதலடைந்தேன்.

'பனைமலையைக் கல்வி யுலகமும் பொது மக்களும் தெளிவாக அறியவேண்டும். அது வரலாற்றாய்வாளர்தம் கருத்தை நன்கு கவர வேண்டும்.

வரலாற்றுக் கருவூலமான பனைமலை சுற்றுலாச் சிறப்பிடமாக மாற வேண்டும்.

அதன் தொடர்பாகப் பொருளாதார வசதிகள் அப் பகுதியெங்கும் பல்கிப் பெருக வேண்டும்'

என்னும் பேரவா என்னுள் நிலைத்திருந்தது.

'இதற்காகத் தனி நூல் எழுதிப் பரப்ப வேண்டும்' என்ற ஆர்வம் என்னுள் வளர்ந்த வண்ணமே யிருந்தது.

எனக்கு நற்பேறாகப் பாகூர்ப் புலவர் சு. குப்புசாமி கிடைத்தார். ஆர்வமும் அயரா உழைப்பும் தொல்பொருள் - கல்வெட்டு ஆய்வுத் திறனும் ஒருங்கமைந்த அவர்தம் ஆய்வுகளை நான் நூல்களாக்கி வெளிப்படுத்தி வந்தேன். அவரையே பனைமலைபற்றிய நூலை எழுதத் தூண்டினேன்.

அதற்கான பணிகளையும் நாங்கள் பத்தாண்டு களுக்கு முன் தொடங்கினோம்.

பலமுறை நண்பர்கள் பேராசிரியர் மா.ரா. இளங் கோவன், பாகூர் சு. குப்புசாமி, வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன், முத்து. எத்திராசன் எம்.ஏ., அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., முதலானவர்கள் சென்றோம். கண்டோம்; படங்கள் எடுத்துக் கொண்டு திரும்பினோம்.

நண்பர் சு. குப்புசாமி நூலை உருவாக்கும் போது, பலவித இடையூறுகள் தோன்றின; காலம் கழிந்தது. அந்த அரிய நண்பரும் திடீரென மறைந்தார். என் எண்ணம் ஈடேறாமல் இருந்தது.

பாகூராருடன் பயின்று பழகி வந்த நண்பர் ந. வேங்கடேசன் அவர்கள் என் ஏக்கம் தீர்க்க முன் வந்தார். பனைமலைக்கு அவர் மீண்டும் படை யெடுத்தார். பார்த்துப் பார்த்துக் குறிப்புகளைத் திரட்டினார்.

பாகூரார் இருந்தபோதே இருவரும் சேர்ந்து கண்டெடுத்த புதிய கல்வெட்டுக்களையும் துணை கொண்டார்.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் தென்ஆர்க்காடு மாவட்ட அலுவலர் திருமிகு மா. சந்திரமூர்த்தி எம். ஏ., அவர்களையும் பனை மலைக்கு அழைத்துச் சென்று, எழுதிய குறிப்பு களையும் காட்டிச் சரி பார்த்து நிறைவு பெற்று, நூலை எழுதி முடித்தார்.

மாணவர்களும் பொதுமக்களும் படித்து எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் நூலை வெளியிட்டுள் ளோம். படங்களுடன் நூலைப் பார்ப்போர், நேரில் பனைமலைக் கோயிலைப் பார்க்கச் செல்வார்கள் என்று நம்புகிறோம்.

பனைமலை மலைக் கோயிலும் பரந்து கிடக்கும் ஏரியும் பார்க்கத் தக்கனாவகும். வடக்கே செஞ்சி முதல் தெற்கே விழுப்புரம், தென்மேற்கே திருக்கோவிலூர் வரையுள்ள இடைப்பட்ட பகுதி யில் பெரிய ஏரி எனச் சொல்லத்தக்கது பனைமலை ஏரி ஒன்றே ஆகும்.

செஞ்சியுடன் பனைமலையைச் சுற்றுலாத் தலமாக்கினால், திண்டிவனத்திலிருந்து செஞ்சியை மையமாகக் கொண்டு, அனந்தபுரம் வழியாகப் பனைமலையைப் பார்க்க வரலாம் அங்கிருந்து தெற்கே பனமலைப்பேட்டை, அன்னியூர், சூரப்பட்டு எனும் ஊர்கள் அமைந்த சாலை வழியாக விழுப்புரம் சேரலாம்.

அதே போல் விழுப்புரத்திலிருந்தும் தென் மேற்கேயுள்ள திருக்கோவிலூர், கண்டாச்சிபுரம் எனும் ஊர்களிலிருந்தும், மேலே குறித்த சூரப்பட்டு அன்னியூர், பனமலைப்பேட்டை வழியாகப் பனை மலையை அடையாலம். அங்கிருந்து வடக்கே

அனந்தபுரம் வழியாகச் செஞ்சிக்கும் பிறகு அங்கிருந்து திண்டிவனத்திற்கும் செல்லலாம்.

தமிழகச் சுற்றுலாத் துறையினர் கருத்துச் செலுத்திக் காணவேண்டிய வரலாற்றுக் கலைக் கோயில் பனைமலை மலைக் கோயில்! 1300 ஆண்டு களாக அழியாமல் காட்சிதரும் பல்லவர் கலைக் கருவூலத்தை வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுப் பயணிகள் பார்த்து மகிழ வழி செய்திடவேண்டும்.

பரந்து கிடக்கும் பனைமலை ஏரியில் பெரிய தொரு குளம் அமைக்கலாம். அங்கே வற்றாத நீர் வளம் சேர்க்கலாம். கோடைக் காலத்தில் அதில் சுற்றுலாப் பயணிகள் இன்பங் காணப் படகுகள் விடலாம்.

தொழிற் சாலைகளும் கைத்தொழில் களும் ஏதும் இல்லாமல், பொருளாதாரங் குன்றி யுள்ள, பிற்பட்டுக் கிடக்கின்ற இப் பகுதி மக்கள் வாழ்வில், சிறு சிறு வாணிகப் பொருள்கள் உருவா கவும் விற்கவும் வாய்ப்பு ஏற்படுத்த அரசு முனைதல் வேண்டும்.

விவசாயம் ஒன்றைமட்டும் நம்பிய பகுதி இது. கைத்தறித் தொழில் சில ஊர்களில் மட்டும் உள்ளது. சுற்றுலாத் திட்டத்தில் செஞ்சியுடன் பனை மலையைச் சேர்ப்பதால் — பஸ் வசதியும் இருப்ப தால் — உடனடியாகப் பொருளாதார வளர்ச்சி தோன்றும் என்பது உறுதி.

அரசியல் பார்வை படாத இப் பகுதி, புதிய வாழ்வைத் தொழில் வளர்ச்சி மூலம் அடைய வேண்டும். அதற்குப் பனைமலை சுற்றுலாத்தலமாக அமைதல் முதற்படியாகும். வரலாற்றுப் புகழை வளர்க்க எல்லாரும் ஊக்கங் கொள்ள வேண்டும்.

ராஜசிம்ம பல்லவன் கட்டிய காஞ்சிக் கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் ஆகிய இரண்டிலும் அன்றாடம் மக்கள் வழிபாடு இல்லாமல் உள்ளது. சிற்றூர் மலைமீதுள்ள இப் பனைமலை மலைக் கோயில், மக்கள் வழிபடும் நிலையில் விளங்கு கிறது. இதுவும் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

பனைமலைக்குக் கிழக்கே சங்கீதமங்கலம் எனும் ஊர் உள்ளது. இங்கே பிறந்த எல். வீரபத்திரன் எனும் பெயருடைய இளைஞர் ஒருவர், பனை மலைக்குப் புதுப் பொலிவு தந்துள்ளார். அருகிலுள்ள ஆறு, ஏழு ஊர்களில் மக்களின் ஒத்துழைப்பை, அயராது சென்று வேண்டிப் பெற்று ஆண்டுதோறும் படிவிழா நடத்தி வருகின்றார். சித்திரை முதல் நாள் நடைபெறும் விழாநாளில் அறிஞர் பெரு மக்களின் சொற் பொழிவையும் ஏற்பாடு செய் கின்றார். இதனால் பல ஊர் மக்களும் பனை மலைக்குத் திரண்டுவந்து பக்தியும் அறிவுப் பயனும் பெற்றுச் செல்கின்றனர். பல்லவ மன்னன் கட்டிய கலைக் கோயிலின் அழகையும் கண்டு அறிந்து போற்றுகின்றனர்.

இந்தியத் தொல் பொருள் துறையின் பாது காப்பில் உள்ள பனைமலை மலைக் கோயிலில்

மின் விளக்குகள் இல்லாதது பொதுமக்களின் பெருங் குறையாகவுள்ளது. இருள் நீக்கி ஒளி சேர்ப்பது முதற்கடமையன்றோ!

மேலும், மலையின் வடக்குப்புறச் சாலை, படிகள் அனந்தபுரம் பக்கம் இறங்கிச் செல்வோர்க்குப் பயன் படாமல் பாழ்பட்டு, தடுக்கப்பட்டு உள்ளன. இந்த வழியைச் சீர் செய்தல் அவசரக் கடமையாகும். அத் துறையினர்தம் செயல்பாட்டை அங்கு வரும் வெளியூர் மக்களும் அண்டையூர் மக்களும் விரும்பி வேண்டுகின்றனர். இதுவும் மக்களுக்குத் தேவைப் படுகின்ற அரிய தொண்டே ஆகும்!

பனைமலை மலைக் கோயில் கட்டடக் கலை விளக்கத்திற்கு உதவுகின்ற சில படங்களை, புதுவையிலுள்ள பிரெஞ்சுக் கலைக் கழகத்தார் படங்களைப் புலவர் சு.குப்புசாமி முன்னரே பெற்றுத் தந்ததை நன்றியுடன் குறிப்பிடக்கடமையுடையேன். அதற்காக அந்த நிலையத்தார்க்கு நெஞ்சார்ந்த நன்றியை வணங்கித் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழகக் கலை-அறிவுப் படைப்புக்களை அவர்கள் பிரெஞ்சு மொழியில் பெயர்த்து உலகிற்கு வழங்கி வரும் தொண்டு போற்றத் தக்கதாகும். தமிழகமே நன்றி கூறத்தக்க நற்பணிக்கூடமாகும் அது.

நூலாசிரியர் நண்பர் ந. வேங்கடேசன் அவர் களின் இப்படைப்பு வரலாற்றுத் திருப்பணியாகும். அவருக்கு நன்றியும் பாராட்டும் கூறிக் கொள்கிறேன்.

ஓவியர்கள் 'ஐக்கூ' கவிஞர் அமுதோனும் பனைமலை R. சதானந்தமும் கைவண்ணம் தந்து நூலை அழகோவியமாக்கியுள்ளனர். இருவர்க்கும் நனறியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்க்கும் தெளிவாக விளங்கும் வண்ணம் நூலை அச்சிட்டுத் தந்த அமுதன் அச்சகத்தார்க்கும் நன்றி.

பனைமலையைச் சுற்றிச் சூழ்ந்த பகுதிகளில் பண்டைய வரலாற்றுச் சான்றுகள் நிறைந்துள்ளன. இது வரை கண்டறிந்தவை சிலவே எனலாம். கண்டறிய வேண்டியவை மிகப் பலவாகும். இதற்கான முயற்சியில் எல்லாரும் முனைப்புக் காட்டி ஊக்கமுடன் செயல்பட வேண்டும். இது வரலாற்றுக் கடமையாகும்.

என் ஊருக்கு எட்டு கிலோ மீட்டர் தென்மேற் கில், ஒதியத்தூர் - கண்டாச்சிபுரம் இடையே உள்ள கீழ்வாலைப் பகுதிக் குன்றுகளில் மிகப் பழங்கால மக்கள் வரைந்த குறியீடுகளைக் கண்டறிந்தபோது, வரலாற்றுலகம் வியப்பிலாழ்ந்தது. அதைப் பற்றிப் புதுவை அறிஞர் பி.எல். சாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் சிந்துவெளி கண்டு பிடிப்புகளுடன் ஒப்பிட்டு ஆய்ந்து எழுதிய கட்டுரையை நான் நூலாக்கி (சேகர் பதிப்பகத்தில்) வெளியிட்டேன்.

'தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம்'

எனும் அந்த நூல் குறிப்பிடத் தகுந்த சிறப்பிடம் பெற்றது.

இந்த நூலும் வரலாற்றுப் பயன் வளர்க்கும் என்று நம்புகின்றேன்.

தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையில் சாதனை புரிந்து சிறந்தவராகிய முன்னாள் இயக்குநர் அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களும் இன்றைய இயக்குநர் அறிஞர் நடன. காசிநாதன் எம்.ஏ., அவர்களும் எனது வரலாற்று நூல் தொண்டுக்கு வாழ்த்துரை கூறி ஊக்குவிப்போராவர். இத் துறையில் ஊக்கமுடன் உழைப்போர்க்குப் பாராட்டும் பரிவும் காட்டும் பண்புடையோராவர். அவ் வகையில் இந்நூலாசிரியர்க்கும் எனக்கும் அன்பு கனிந்து நூலைப் பற்றிய தங்கள் மதிப்புயர்ந்த கருத்தோவியங்களைத் தந்து வாழ்த்தியுள்ளார்கள். பெரிய உள்ளம் படைத்த அறிஞர் இருவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியை வணங்கித் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நேரத்தில், நாட்டில் பல்வேறு பகுதிகளில் தொல்லியல் துறைக்கு நல்லுழைப்பை நல்கியவாறு உள்ளவர்களையும் நன்றியோடு நினைத்துப் போற்றுகின்றேன். அருளுடைச் சோழமண்டலத்துப் புகழ்மிகு சாதனையாளர், குடந்தை அறிஞர் நா. சேதுராமன் பி.எஸ்சி., அவர்கள், அச்சிறுபாக்கத்து ஆராய்ச்சி வல்லுநர் டாக்டர் தாமரைக் கண்ணன் எம்.ஏ., அவர்கள், திருச்சியில் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்தவாறு தொல்லியல் ஆய்வில் அருந்தொண்டாற்றி வரும் டாக்டர் மா.ரா. கலைக்கோவன் அவர்கள், ஆடுதுறையில் அமர்ந்து ஆய்வுப் பணியாற்றும் வே. மகாதேவன் எம்.ஏ., அவர்கள், 'தினமணி' ஆசிரியர் ஐராவதம் மகாதேவன் அவர்கள், 'தினமலர்' ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முதலான பலர் குறிப்பிடத் தக்கோராவர். ஆர்வமுடன் ஆய்வுப்பணி புரியும் பலரையும் கண்டறிந்து போற்ற வேண்டும்.

இது போன்று பல துறைகளிலும் பற்பலர் துடிப்புடன் தொண்டாற்றுகின்றனர். அவர்தம் உழைப்பும் உணர்வும் சமுதாயத்தைச் செம்மைப் படுத்தும்; செழுமைப்படுத்தும். எனவே அத்தகையோரை நன்றியுடன் போற்றுவோம்! அவர்கட்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம்; ஊக்கப் படுத்துவோம். இது அறிவறிந்த மக்களின் வாழ்வியல் கடமை அன்றோ!

இந் நூல் முடியும் நிலையில், கோயில் பற்றிய விளக்கம் சேர்க்க உணர்வைத் தூண்டியவர், மதிப் பிற்குரிய பெரியவர் திருமழிசை தி.சா. சம்பந்தம் அவர்களாவார். பண்புமிகு பெருந்தகையோராகிய அவர், என் வாழ்வில் ஒளி காட்டியவர்; வழி காட்டியாகவும் விளங்குகிறார். அவர்களைப் போற்றி வணங்குகிறேன்.

வரலாறு ஒளி பெறுக! பனைமலையின் புகழ் வளர்க!

அன்பன்
வெள்ளையாம்பட்டு சுந்தரம்
திருக்குறள் பதிப்பகம்

அறிமுகம் 1. ஓவியக் கலை

ஆதிமனிதன் பேசும் பழக்கம் இல்லாத நிலையில் இருந்தான். அப்போது தன் எண்ணத்தை வெளிப்படுத்திப் பிறர்க்குத் தெரிவிக்க, அவன் வண்ணக் கோடுகளால் சில அடையாளங்களைப் பாறைகளில் தீட்டிக் காட்டினான். அவன், எதிர்த்த விலங்குகளை உருவமாகத் தீட்டினான்; பயத்தால் வணங்கும் உருவத்தைத்தீட்டினான்; உதவி புரியும் விலங்கு உருவங்களையும் வரைந்தான். ஆயுதங்கள், போரிடுதல், மனிதர் முதலான உருவங்களையும் முற்கால மனிதர்கள் வரைந்துள்ளனர்.

வெள்ளை, சிவப்பு நிறக் கோடுகளால் முற்கால ஓவியங்கள் குகைகளில் காணப்படுகின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், மனித வாழ்வின் தொடக்கத்தில், அந்த வண்ணங்கள் எவ்வாறு உருவானது என்பது தெரியவில்லை.

முற்கால மனிதன் தொடங்கிய கோட்டுருவக் குறியீடுகளே, உருவ அடையாளங்களே, பண்பட்ட மனித வாழ்வில் ஓவியமாக ஒழுங்கு பெற்றது; வளர்ந்து செம்மை யுற்றது.

அடையாளக் குறியீடுகளே ஆதிமனிதனின் உரைதடை எனலாம்.

மனிதனின் அறிவும் கலையுணர்வும் வளரும் போதே வடிவ வளர்ச்சியும் உருவாகியிருக்க வேண்டும். ஓவியம் வரைதலில் கால வளர்ச்சிக் கேற்ற உத்திகளும் வண்ணங்களும் கூடியுள்ளன.

ஓவியக்கலை சிற்பக் கலைக்கு அடிப்படையாகிறது.

ஓவியம் வரையாமல் சிற்பம் வரைய முடியாதன்றோ?

கட்டடக் கலைக்கும் ஓவியக் கலையே ஆதாரமாகும்.

ஓவியக்கலை, நுண் கலைகளில் ஒன்று. இது கண்களுக்குக் காட்சி யளவில் இன்பந்தரும்; சிறந்த கலை உணர்வுக்கு உயர்ந்த விருந்தாகும.

ஓவியங்கள் பெரும்பாலும் சுவர்களிலேயே வரையப்படுகின்றன.

திரைச் சீலை, பலகைகள் முதலியவற்றிலும் ஓவியம் வரைதல் உண்டு.

ஓவியத்தை வரைவது தூரிகை; வண்ண எழுது கோல் என்பனவாகும்.

ஓவியத்திற்குரிய வண்ணங்கள் ஐந்து என்பது பொதுவான அடிப்படையாகும்.

கறுப்பு சிவப்பு மஞ்சள் நீலம் வெள்ளை என்பன ஓவியந் தீட்டுதற்குரிய அடிப்படை வண்ணங் களாகும்.

கலையறிவு நூல்களில் பழைமையானவை என ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள சங்ககாலப் பாடல்களும் பிற்கால பக்தி நூல்களும் அங்குமிங்குமாக அறிவிப்பனவற்றிலிருந்தே நாம் சில குறிப்புகளை அறிகிறோம். ஓவியக் கலையின் நிலையும் இப்படிப்பட்டதே.

தமிழகத்தில் பழைமையானதாகக் காணப் படுவன பல்லவர்கால ஓவியங்களே. இவை மகா பலிபுரம், பனைமலை, காஞ்சிபுரம் கயிலாயநாதர் கோயில்களில் காணப்படுகின்றன.

பண்பட்ட ஓவியத்தின் சிறப்பைப் பனைமலை மலைக்கோயிலில் பார்க்கிறோம்.

பனைமலை ஓவியம், பார்ப்போரை வியப்பில் மூழ்கச் செய்கிறது. சிதைந்தும் வண்ணம் மறைந்தும் உள்ள நிலையில், சிவப்பு கருப்பு நிறக் கோடுகளும் கலை மிடுக்கோடு காட்சியளிக்கின்றன.

சித்திரக் கலையும் சிற்பக் கட்டடக் கலையும் சேர்ந்து சிறப்புற்றுத் திகழும் பழமை மிகு கலைக் கூடம் பனைமலை மலைக் கோயில்.

பனைமலை ஓவியம் பன்னிரண்டு நூற்றாண்டு களுக்கு மேற்பட்ட பழைமையுடையது. 50 ஆண்டு கட்கு முன்னர் எடுத்த புகைப்படத்தில் அழிந்த நிலையில் உள்ள அம்மனின் ஓவியப் பகுதியைக் காணமுடிகிறது.

செம்மை நிறக் கோடுகளும் கரிய நிறக் கோடு களும் பனைமலை குன்றுடைநாதர் கோயில் அறைச் சுவரில் காணப்படுகின்றன. சீரிழந்த அதன் சிறப்பை முழுமையாக்கி, இந்நூலின் மேலட்டையில் வண்ண ஓவியமாகத் தரப்பட்டுள்ளது.

உலகம் புகழும் அஜந்தா, எல்லோராவிலுள்ள குகை ஓவியங்களைப் போன்றது, பனைமலையில் உள்ள பார்வதியின் எழிலோவியம்.

பார்த்துப் பார்த்து வியக்கத் தக்கது பல்லவர் ஓவியம்!

பழந்தமிழர் கலை வண்ணத்திற்குச் சான்றாய் விளங்குவது பனைமலை ஓவியம்!



அறிமுகம் - 2. கோயில் கட்டடக் கலை

உலகில் கட்டடக் கலை வடிவங்கள் பலவாறு அமைந்துள்ளன.

இந்தியாவில் கட்டடக் கலையை
நாகர வகை, திராவிட வகை, வேசர வகை
என மூன்று விதமாக வகுத்துள்ளனர்.

திராவிடர் கட்டடக் கலை என்பது தமிழகச் சூழலுக்கு ஏற்ப அமைந்தது. தனித் தன்மை யுடையது.

இதற்குப் பல்லவர்காலக் கோயில் கட்டடங்கள் முதன்மையான சான்றுகளாகத் திகழ்கின்றன.

'துரும்பைத் தூணாக்குதல்' என்பது ஒரு சொல் வழக்கு.

'தூணே கோயிலாக மலர்கிறது' என்கிறது திராவிடக் கட்டடக் கலை.

தூணின் அமைப்பிலிருந்தே கோயில் கட்டட அமைப்பு வளர்ச்சி பெற்றுள்ளது என்கின்றனர் ஆய்வாளர்.

காலந்தோறும் இடத்துக்கு ஏற்றவாறு கட்டடக் கலை மெல்ல மெல்ல வளர்ந்தும் மாறுதல் பெற்றும் சிறப்படைந்துள்ளது. வரலாற்றில் ஊன்றிப்பார்த்து அறியத்தக்க உண்மை இது.

ஓரளவு தெளிவாகத் தெரியும் காலத்திலிருந்து கவனித்துப் பார்த்துக் கீழ்க் கண்டவாறு கூறப்படு கின்றது.

கி.பி. 600 முதல் 900 வரை பல்லவர் காலம்
கி.பி. 900 முதல் 1100 வரை முற்காலச்சோழர் காலம்
கி.பி. 1100 முதல் 1350 வரை பிற்காலச் சோழர்காலம்
கி.பி. 1350 முதல் 1600 வரை விசயநகர வேந்தர்காலம்

கி. பி. 1600 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நமது காலம் வரையும் உள்ள கலைமரபு, நாய்க்கர் வழி யைப் போற்றிக் கொண்டதே எனலாம்.

தமிழகத்தில் இன்று செழித்து வளர்ந்து விளங் கும் கோயில் கட்டடக் கலை, தமிழ்மண்ணுக்கே உரிய தனித் தன்மையைப் புலப்படுத்துகின்றது. அதுவும் பல்லவர் தந்த கொடை என்பதில் ஐயமில்லை.

பல்லவர்தம் செயல்கள் அனைத்தும் தமிழ் நாட்டுக்கே உரிய, தமிழர்தம் பண்பாட்டின் விளைவுகளே என்பதை எளிதில் உணரலாம்.

பல்லவர்கள் நல்லவர்கள்; மேலும் நம்மவர்கள்; நற்றமிழர்கள்; நம் நாவுக்கரசரின் நல்லன்புக் குரியவர்கள்!

பாண்டியத் தமிழர், சோழத் தமிழர், சேர நாட்டுத் தமிழர்; கொங்குத் தமிழர்; மேலும்

சிங்களத் தமிழர், மொரீஷியஸ் தமிழர்! எல்லாரும் தமிழினத்தார்; தமிழ் நாட்டார்; தமிழ் மொழியாளர்!

கடல் மல்லையில் கல் தேர்களையும் கற்கோயில் கட்டடத்தையும் எழுப்பிய இராஜசிம்மன், பனைமலை மலைமீது கட்டிய சிவன்கோயில் புதிய தொரு முயற்சியாகும். பனைமலை குன்றுடையார் கோயில் புதுமுறைக் கட்டடக் கலையின் முதல் படைப்பாகும்.

பனைமலைக் கோயிலுக்குப் பின்னர் கட்டியது காஞ்சிபுரத்திலுள்ள கயிலாச நாதர் கோயில் என்பது ஒரு கருத்து.

ஞாழற் கோயில்
கொகுடிக் கோயில்
இளங் கோயில்
மணிக் கோயில்

என்னும் கோயில் பெயர்களைத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

கி.பி. எழுநூறுக்கு முன்னர், நம் நாட்டில் கட்டடக் கலை எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவாக அறிவிக்கும் குறிப்புகள் ஏதும் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் அழகிய, உயர்ந்த கட்டடங்கள், கோயில்கள் இருந்தன என்பதை இலக்கியங்கள் இயம்புகின்றன. அக்காலத்துக் கோயில்கள் மரம், செங்கல், சுண்ணாம்புக் கலவையால் ஆனவையே.

இராஜசிம்ம பல்லவன் பனைமலை மலைமீது கட்டிய முதல் கற்கோயிலின் கட்டடக் கலைமரபு காலந்தோறும் மேலும் வளர்ச்சி பெற அடிப்படையாயிற்று.

பனைமலை மலையிலுள்ள விமானக் கோயிலின் வளர்ச்சியின் உச்ச நிலையில், தஞ்சைப் பெருவுடையார் பெரியகோயில் உருவாகித் திகழ்கின்றது என்பர் அறிஞர்.

ஏறத்தாழ கி.பி. 700 அளவில் தொடங்கி, கி.பி.1000 அளவில் கோயில் கட்டடக்கலை முழுமையும் செழுமையும் பெற்றுள்ளது.

கோயிலின் வாயில் நிலைகளின்மேல் எழுப்பப்படுவது கோபுரம்.

கோயில் உள்நாழியின்மேல் அமைக்கப்படுவது விமானம்.

தமிழகக் கோயில் விமானங்களில் மிக உயர மானவை மூன்று உள்ளன என்பர் அறிஞர்.

1. தஞ்சைப் பெருவுடையார் கோயில் ராஜ ராஜேஸ்வரம் விமானம் (கி.பி. 1010)
2. கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் விமானம். (1012—1044)
3. திரிபுவனத்திலுள்ள கம்பகரேஸ்வரம் கோயில் விமானம். (1178—1223)

இரண்டாம் இராஜராஜன்(1147-73)குடந்தை தாராசுரத்தில் கட்டிய இராஜராஜேஸ்வரம் எனும் கோயில் தனிப் புகழ் உடையதாகும்.

மூன்றாம் குலோத்துங்கன் (1178—1223) திரி புவனத்தில் கட்டிய கம்பகரேஸ்வரம் எனும் அழகிய விமானக் கோயில் விமான அமைப்புச் சிறப்பில் ஓர் எல்லையாக விளங்குகிறது.

இக் காலத்திற்குப் பின் விமான அமைப்பு குறையத் தொடங்கியதை அறிகிறோம். விமானக் கோயில் மரபு, பெரிய அளவில் தோன்றவில்லை.

அதற்குப் பதிலாக, கோபுரங்களில் கருத்துச் செலுத்தியுள்ளார்கள். மூலவர் உறைவிடத்தில் விமானம் சிறிதாக அமைக்கலாயினர். மூலவருடைய இடத்திற்கு முன்னால், வாயில்களை எடுப்பாக எழுப்பும் ஆர்வம் மேலெழுந்துள்ளது. அதனால் வெளிக் கோபுரங்கள் உயர்ந்து தோன்றலாயின.

சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர், காளகஸ்தி கோயில் கோபுரங்கள் முதலியன பெருங் கோபுரங்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கனவாம்.

விஜய நகர மன்னர்கள் பெருங்கோபுரங்களைக் கட்டிப் பெருமிதம் கொண்டார்கள். வெளிச் சுற்றுகள் அமைத்தவர்கள் இவர்கள். சிறந்த கலைச் சிற்பங்கள், மண்டபங்கள் முதலியவற்றையும் உருவாக்கினார்கள். 7முதல்11அடுக்குகள் கொண்ட ராய கோபுரங்களை அமைத்த சிறப்பும் விஜயநகரப் பேரரசர்களையே சாரும்.

விமானமுடைய பனைமலை மலைக் கோயிலில் கிழக்குப்புற மண்டபமும் தென்புற மண்டபமும் உள்ளன.

இவையும் பிற்காலச் சோழர், நாய்க்கர் காலத் தவையே ஆகும்.

நமது கோயில்களின் அமைப்பும் கவனிக்கத் தக்கது. இதில் பல அமைப்புகள் உள்ளன. பொதுவாக, மனித உடல் உறுப்புகளின் அமைப்பை ஒட்டியே கோயில் அமைப்பும் திட்டமிட்டுள்ளது என்கின்றனர். இம் முறை, பரவலாகக் காணப் படுகின்றது.

1 உண்ணாழி	5 திருச்சுற்று
2 அந்தராளம்	6 பலிபீடம்
3 அர்த்தமண்டபம்	7 கொடிமரம்
4 மகாமண்டபம்	8 வெளிவாயில்

இவ்வகையான கோயில் அமைப்புகளையும் மேலும் உள்ள அரிய கலை நுணுக்கங்களையும் அறிந்து போற்றுவோமாக!

பனைமலைக் கோயில் அளவில் சிறியது. பின்பு எழுப்பிய காஞ்சி கயிலாசநாதர் கோயில் பெரியதாயும் மேலும் வளர்ச்சியுற்ற கலை வண்ணத்தோடும் உருவாக்கப் பெற்றுள்ளது. இவ்வாறான கருத்தும் உள்ளன.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும்

பனைமலை மலைக் கோயிலும்

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலும்

திராவிட மரபுக் கலை வடிவங்களேயாகும்.

'செங்கல், சுண்ணம், மரம், உலோகம்
முதலியவை இல்லாமலே
பிரம, ஈசுவர, விஷ்ணுக்களுக்கு
விசித்திரசித்தன் என்னும் அரசன்
இந்தக் கோயிலை அமைத்தான்.'

இப்படி ஒரு கல்வெட்டு வாசகம் வடமொழியில் உள்ளது. பனைமலைக்கு வடகிழக்கே ஏறத்தாழ பதினைந்து கி.மீ. தொலைவில் உள்ள மண்டகப்பட்டு எனும் ஊருக்கு அருகிலிருக்கும் குகைக் கோயில் சுவரில் காணப்படும் கல்லெழுத்துச் செய்தி இது.

இந்தக் குகைக் கோயிலை உருவாக்கியவன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 590—630).

இம் மன்னனுக்குப் பின் ஏறத்தாழ எழுபதாண்டுகளில் முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேஸ்வர வர்மன் எனும் மூன்று மன்னர்கள் அரசு புரிந்துள்ளனர். அவர்கட்குப் பின்னர் அரசனானவன் இராஜசிம்மன்.

இவன், தன் முன்னோர் குன்றுகளில் குகைக் கோயில் எழுப்பியதைத் தொடர்ந்து, தானும் புது வழி காணத் தொடங்கியுள்ளான் என்பது தெளிவாகிறது.





பனைமலைக் கோயிலை முதலில் கண்டவர்
பல்லவர் கலைப் பணிகளை உலகுக்கு அறிவித்தவர்
பிரெஞ்சுப் பேராசிரியர் கபிரியேல் ழுவோ துப்ரான்



கல்வெட்டாய்வில் புகழ்படைத்த பாகூர் புலவர்
சு. குப்புசாமி அவர்களுக்கு
இந்நூல் காணிக்கை



சிறபக் கலையின் சிறந்த படைப்பு

துர்க்கை

பனைமலை
மலைப்படிகளின்
அருகே அமைந்துள்ள
குகையில் உள்ளது

மேற்கு நோக்கியவாறு
காட்சிதருகிறது.

பல்லவர்கால எழில் மிக்க
கருங்கல் சிற்பம்.

நன்றி : பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், புதுவை.



பல்லவர் கால ஆட்சிமொழி எழுத்துகள்

ராஜஸிம்ஹோ ரணஜய꞉

ஸ்ரீ பரஸ் சித்ர கார்முக꞉

ஏக வீரஸ்சிரம் பாது

சிவ சூடாமணி꞉மஹீம்

★

போர்களில் வெற்றியைத் தழுவுபவனும்
செல்வத்தின் இருப்பிடமும் வில்லாளியும்
தனியொரு வீரனும் (ஏக வீரன்)
சிவ சூடாமணியுமான ராஜஸிம்ஹன்
பூமியை நெடுங்காலம் (பாது காக்கட்டும்)
புரக்கட்டும்

பனைமலை, துர்க்கைக் குகைக் குன்றில் உள்ள கல்லெழுத்து வாசகம். பல்லவ மன்னன் இராஜசிம்மனைப் பற்றிய வாழ்த்துரை.





பல்லவர் காலக் கல்லெழுத்துகள்



தென்புற மண்டபம்





சிற்பத் தூண்கள்









பனைமலை மலைமீதுள்ள குன்றுடைய நாதர் சிவன்கோயில்



பனைமலை ஊரும் வழித் தடங்களும்





பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்



செஞ்சி - விழுப்புரம் சாலையில் அனந்தபுரத்திற்குத் தெற்கில், பனைமலை ஊர் உள்ளது.



பனைமலை — மலைக்கோயிலுக்குச் செல்லும் படிகள்







துவார பாலகர்



1

வரலாற்றில் பனைமலை

புகழ் மிகு வரலாற்றில் பொலிந்திடும் ஒரு கலைக் கோயில்! வெளியில் நன்கு பரப்பப்படாமல் இருக்கும் திருக் கோயில்! பல்லவர் புகழ் பாடும் பனைமலை மலைக் கோயில்!

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில், விழுப்புரத்திலிருந்து வடமேற்கே ஏறத்தாழ 20. கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது பனைமலை என்னும் சிற்றூர். அது எண்ணற்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்தைக் கவர்ந்த சிறப்பு மிக்கது.

அவ் வூருக்கு அணித்தாக வடக்குப் பக்கம் 41 மீட்டர் உயரமுள்ள அழகிய குன்று ஒன்று உண்டு.

அக் குன்றைச் சுற்றிக்கிழக்கிலும் தெற்கிலும் நீண்ட நெடுந் தொலைவு வரை நன்செய் நிலங்கள். அங்கே மரகதக் கம்பளம் விரித்து வைத்தாற் போலும் பசுமை போர்த்திய பயிர்களின் தோற்றம் ஒரு பக்கம்! கல்வி சேர் மாந்தரைப்போல மணிமுற்றித் தலை கவிழ்ந்து அடக்கமே உருவாகக் காட்சி நல்கும் விளைந்த நெற் பயிர்களின் தோற்றம் இன்னொரு பக்கம்.

குன்றின் மேற்கிலும் வடக்கிலும் அமைந்த, நீர் நிறைந்த மாபெரும் ஏரியின் பேரலைகள், மலையின் அடிப் பகுதியைத் தொட்டுச் செல்லும் அழகுக் காட்சி! மலைத் தொடர்களே அவ் ஏரியின் கரைகளாக அமைந்திருக்கும் அழகுத் தோற்றம்!

இயற்கை அன்னையின் இக் கவினுறு காட்சி, காண்பாரை மெய்மறக்கச் செய்யும்! கவிஞரைக் கவி பாடத் தூண்டும்! கலைஞர்களைக் 'கண்ணிரண்டும் போதாதே' என்று கலங்கச் செய்திடும்!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கு ஒரு கலைஞன் வந்தான்; இக் குன்றேறி நின்று தன் கண்ணுக் கெட்டிய தூர மெல்லாம் கண்டு மகிழ்ந்தான். அவன் உள்ளம் சிலிர்த்தது. அவன் கால்கள் உச்சியின் எல்லாப் பக்கங்களிலும் உலா வந்தன! ஏரியின் பேரலைகள் குன்றின் பாறைகளைக் குடைந்து சென்றன. அவன் எண்ண அலைகளோ உள்ளத்தைக் குடைந்தன.

ஒரு பக்கம் மலையும் மலை சூழ்ந்த இடமும் அவனுக்குக் குறிஞ்சி நிலத்தை நினைவூட்டின. இன்னொரு பக்கம் காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலத்தை அடையாளங் காட்டின. வேறொரு பக்கம் வயலும் வயல்சார்ந்த பகுதியும் மருதத்தை நினைவு படுத்தின. மற்றுமொரு பக்கம் கடல் போலும் பரந்து விரிந்த நீரும் நீர் சார்ந்த பகுதியும் நெய்தலை நினைவூட்டின.

மாலை நேரம்! மெல்லென்ற தென்றற் காற்று! அவன் மேனியைத் தழுவிச் சென்றது. பறவைகளின் மெல்லொலி அவன் செவிகளுக்கு இதமளித்தது. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். இல்லை! அவனை அது ஆட்கொண்டது!

இயற்கையில் அமைந்த இக் குன்றின் மீது செயற்கையில் ஒரு கலைக்குன்றை அமைத்தால், அது எப்படி இருக்கும்?

அக் கலைக் குன்றை வண்ணங்களால் அழகு படுத்தினால், இன்னும் எப்படி இருக்கும்?

அக் கலைஞனின் எண்ண ஓட்டம் இப்படியெல்லாம் சென்றிருக்க வேண்டும்.

குன்றின்மீது அன்று அவன் நின்ற இடம், ஒரு கலைக் கோயிலாக, கலைக் கூடமாக உருவாகியது. வந்தவன் கலைஞன் மட்டுமல்லன்; நாடாண்ட பேரரசன்; நானிலம் புரக்கும் காவலன்; பல்லவர்குலத் தோன்றல்.

அவன் பெயர் இராசசிம்மன்!

அவனால் உருப்பெற்ற கலைக் கோயில் — ஒரு சிவன் கோயில். குன்றுடையார் பெருங் கோயில்!

இக் காலத்து ஆராய்ச்சியாளரை, அறிஞர் பெருமக்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் படைத்த அக் கோயில், கலை உலகின் திருப்பத்தைக் காட்டுகின்ற ஒளிவிளக்கு! கண்ணுள் வினைஞரின் கைபட்டுப் பொலிகின்ற கருவூலம்!

இராச சிம்மப் பல்லவன் எடுப்பித்த பனைமலைக் குன்றுடையார் பெருங் கோயில், அன்றைய நாளில் இப் பகுதியில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் பற்றி எல்லாம் நாம் எண்ணிப் பார்த்ததுண்டா? இல்லை!

ஆனால், பிரஞ்சு நாட்டுப் பேரறிஞர் பேராசிரியர் கபிரியேல் ழுவோ துப்ராய் என்பார் வந்தார் கண்டார்; எண்ணிப் பார்த்தார்.

இராச சிம்மனின் உயர்வினையும் இக் கலைக் கோயிலின் கட்டடச் சிறப்பினையும் வெளி உலகுக்கு, குறிப்பாக ஆராய்ச்சி அறிஞர்களுக்கு அடையாளங் காட்டிய பெருந்தகை இவர்தாம்!

இவரைப் பின்பற்றி எண்ணற்ற ஆராய்ச்சியாளர், எண்ணற்ற கோணங்களில் இக் கோயிலைக் கண்டார்கள்! ஆராய்ந்தார்கள்.

இராசசிம்மன் காலத்துப் பனைமலைக்கோயில் கல்வெட்டுகள், அவன் எடுப்பித்த சிவன் கோயிலின் கட்டட அமைப்பு, அவன் காலத்திய ஓவியம் ஆகியவைகளே ஆராய்ச்சியாளர்க்கு இதுவரை மையப் பொருளாக அமைந்திருந்தன. அவற்றோடு, நாங்கள் (பாகூர் புலவர் சு. குப்புசாமியும் நானும்) புதிதாகக் கண்டு பிடித்த சில கல்வெட்டுச் செய்திகளையும் சேர்த்துக் காண்பதே இந் நூலின் நோக்கமாகும்.

கலைச் சுவடுகள்

கால ஓட்டங்கள், காலங் காலமாகப் பதித்துச் சென்ற சுவடுகள்தாம், இன்று வரலாற்று மூலங்களாக உதவுகின்றன.

பனைமலைப் பகுதியில் இத்தகைய சுவடுகளுக்குக் குறைவில்லை. பனைமலைப் பகுதியில் அச் சுவடுகள் கல்வெட்டுகளாகவும், ஓவியங்களாகவும், கட்டடங்களாகவும் காட்சியளிக்கின்றன. பனைமலையின் பழஞ் சிறப்பை அறிந்து கொள்ள இவைகளே நமக்குத் துணை புரிகின்றன. அழிந்தும் அழியாமலும் காணக் கிடக்கும் அச் சுவடுகளை அடையாளம் கண்டு கொள்வது அறிவுடைமை யன்றோ!

இனி, அவை பற்றிக் காண்போம்.

இராசசிம்மன் கல்வெட்டுகள்

மலைமீது ஏறிச் செல்லும் படிகளில் நடக்கின்றோம். மேலே சிறிது தூரம் சென்றதும் இடது புறமாக ஒரு வழி பிரிகிறது. அப் பக்கம் சென்றால் நீண்ட ஏரியின் தென் மேற்குக்கரை மலையுடன் இணைவதைப் பார்க்கிறோம்.

அங்கே, குன்றில் ஒரு சிறிய குகை. இயற்கையில் அமைந்த அக் குகையில் ஓர் அழகிய தெய்வக் கலை வடிவம்! துர்க்கை!

துர்க்கையின் இடப் புறம் குன்றில், அழகிய எழுத்துக்கள் காட்சியளிக்கின்றன!

நாம் காணும் முதல் கல்வெட்டுச் சான்று இது!

அதைப் பார்த்த பின், தொடர்ந்து படிகள் வழியே கலைக் கோயிலை அடைகிறோம்.

கலைக் கோயிலின் இடையிடையே சிதைந்த நிலையில் கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன. பல்லவர் குலத்தின் தோற்றம் பற்றியும், அவர்தம் மரபுவழிப் பட்டியலையும் கூறுகின்றன. இராசசிம்மனின் பல்வேறு ஆற்றல்களையும் அக் கல்லெழுத்துகள் நமக்கு அறிவிக்கின்றன.[1] இக் கல்வெட்டுகள் பல்லவ (கிரந்த) எழுத்துக்களில் அமைந்துள்ளன.

துர்க்கைக் குகைக் கோயிற் கல்வெட்டு இம் மன்னனின் பலப் பல விருதுப் பெயர்களைச் சுட்டுகின்றது.

வானூர், திரு. இராகவேந்திராச்சாரியார் அவர்கள், இக் கல்வெட்டை முதலில் கண்டுபிடித்து, ஆராய்ச்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்[2].

இராசசிம்மனின் விருதுப் பெயர்களையும் அவனுடைய பல திறப்பட்ட சிறப்புக்களையும் விரித்துக் கூறுகின்ற இவ் விரண்டு கல்வெட்டுக்களிலும், பனைமலைச் சிவன் கோயிலைப் பற்றிய எவ்வகைக் குறிப்பும் காணப் பெற வில்லை.

1. Epigraphic India vol. xix pages 109-115
2. S. I. I. Vol. I. No 31. & ARE 1916 Page 112.

ஆயினும், அக் கல்வெட்டுக்கள், கோயில் பகுதியில் அமைந்திருக்கும் காரணம் பற்றியும் வேறு சில காரணங்களைக் கருத்திற் கொண்டும், இக் கோயிலை கட்டியவன் இராசசிம்மனே என்று அறிஞர்கள் முடிவு செய்தனர்.

கவின்மிகு கலைக் கோயில்

பல்லவர் காலக் கட்டடக் கலையை அறிந்து கொள்ள காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலும், மாமல்லைக் கடற்கரைக் கோயிலும், பனைமலைக் குன்றுடையார்க் கோயிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

குறிப்பாகப் பல்லவ வேந்தர்கள் குடைவரைக் கோயில்கள் அமைப்பதை நிறுத்தி, கற்றளிகள் (கல் கட்டடங்கள்) அமைக்கும் வழக்கத்தை மேற் கொண்ட காலக்கட்டத்தை இக் கோயில்கள் நினைவு படுத்துகின்றன.

அழகிய கட்டடங்கள், அவற்றில் வனப்பு வாய்ந்த சிற்பங்கள், எழில் கொழிக்கும் வண்ண வண்ண ஓவியங்கள்-இவை எல்லாம் பல்லவர்களின் கலை ஆர்வத்தைப் புலப்படுத்தும் போதிய சான்றுகள்.

கட்டட அமைப்புக் கலையில் நம்மவர் பெற்றிருந்த நுண்ணறிவு, ஓவியங்கள் வரைவதில், வண்ணக் கலவையில் அவர்கள் பெற்றிருந்த பட்டறிவு, உருவாக்கங்களுக்குப் பயன் படுத்திய பலதிறப்பட்ட கருவிகள், அனைத்திற்கும் மேலாக அக்காலத் தொழில் நுட்பங்கள்—இவற்றை எல்லாம் நாம் அறிந்து கொள்ள இக் கோயில்களே சான்றுகள்.



பனைமலையில் இந்தியத் தொல்பொருள் துறையினர் மலை ஏறுதற்குப் படிகள் அமைத்துள்ளனர்.

அடிவாரத்தில், குன்றில் விநாயகர் உருவம் புடைப்புச் சிற்பமாகக் காட்சி கொடுக்கிறது.

துர்க்கையின் குடைவரையில் முன்புறம் தென் திசை நோக்கி இடம்புரி விநாயகர் உருவம் புடைச் சிற்பமாகச் செதுக்கப் பெற்றுள்ளது.

பெரும்பாலும் நாம் காணும் விநாயகரின் திருவுருவ அமைப்பிலிருந்து இவ் வுருவம் வேறு படுகிறது.

இவ் விநாயகர் அமர்ந்துள்ள கோலமும் தலையில் அணிந்துள்ள மகுடமும் கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்களும் உருவ அமைப்பில் ஆடை அணிகலன்களின் வகையும் பல்லவர் காலக் கலைப்பாணியை வெளிப்படுத்துகிறது. கி. பி. 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த இவ்விநாயகர் இராசசிம்மப் பல்லவர் காலத்தியது.

இவ் வுருவம் இரண்டு காலையும், குத்திட்டு அமர்ந்துள்ளது.

நான்கு கைகளில், மேல் வலக்கை தண்டம் போன்ற உருளையான ஆயுதத்தைப் பிடித்துள்ளது. இடக் கையில் கரும்புத் தோகையைப் பிடித்துள்ளது. கீழ் வலக் கை, மார்பை யொட்டி அபய முத்திரையில் அமைந்துள்ளது.

இடக்கையின் உள்ளங்கை குத்திட்டுள்ள முழங்கால் மீது அமைந்துள்ளது.

விநாயகரின் தலையை உயர்ந்த ஜடா மகுடம் அணி செய்கிறது.

மார்பில் தடித்த பூணூல் வீழ்ந்து வனப் பூட்டுகிறது.

விநாயகரின் துதிக்கை இடம்புரியாக வளைந்து மேலேறிச் செல்கிறது.

பொதுவாகப் பிற்கால விநாயகர் உருவங்களில் வலது தந்தம் உடைந்து காணப்பெறும். ஆனால் மாறாக, இங்கு இடது தந்தம் உடைந்துள்ளது.

இவ்விதம் அமைப்பிலும் அழகிலும் மாறுபட்டு விளங்கும் விநாயகரின் உருவம் பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

இதே காலத்தைச் சேர்ந்த பல்லவர் காலத் துர்க்கையும் பல்லவக் கிரந்தக் கல்வெட்டும் இதன் அருகில் அமைந்துள்ளன. இவற்றின் சம காலக் கலைப் பாணியையும் காலத்தையும் ஒப்பிட்டுக் காண உதவுகின்றன.

துர்க்கை

சீறிப் பாயும் சிம்மத்தின் மீது இடது காலை ஊன்றி வலது காலைத் தரையில் நிறுத்தி, எண் தோள்களுடன் துர்க்கையின் அழகுக் கோலம் புடைச் சிற்பமாக விளங்குகிறது.

துர்க்கையின் வலது மேற்கைகள் முறையே சக்கரம் (ஆழி), நீண்ட போர் வாள் பற்றியுள்ளன.



ஏனைய இரு கைகளில் ஒன்று, கடக முத்திரையிலும் மற்றொன்று இடை மீது கடிகஸ்தத்திலும் அமைந்துள்ளன.

இடது கைகள் முறையே மேலிருந்து கீழாகச் சங்கம், கேடயம், நீண்டவில் ஆகிய ஆயுதங்களைப் பிடித்துள்ளன.

நான்காவது கை முழங்கால் மீது மடங்கித் துடைமீது படிந்துள்ளது.

பல்லவர் காலத்திய இத் துர்க்கை, செங்குத்தாகச் சாய்ந்து அமைந்த தலையில் உயர்ந்த மகுடம் எழிலாக அமைந்துள்ளது.

காதுகளில் வட்டமான தடித்த ஓலைக் குழையும்,
கழுத்தில் ஓர் அணியும்,
மேற்கையில் தோள்வளையும்,
இருதனங்களின் ஊடேபூணூலும்,
முன் கையில் கைவளையும்,
இடையில் கச்சையும்,
இடையின் முன்புறம் இடைவாரும்,
இடையின் பக்கங்களில் ஆடைக்கட்டும்,
காலில் பாத சரமும்
அலங்கரிக்கின்றன.

துர்க்கையைச் சுமக்கும் சிம்மம் முன் இடக் காலைத் தரையில் ஊன்றி, வலக் காலை மேலே தூக்கிச் சாய்ந்திருக்கு நிலையில் இயற்கையாக அமைக்கப் பெற்றுள்ளது.

சிம்மத்தின் மீது இடக் காலை ஊன்றி, நின்ற கோலத்தில் கம்பீரமாகத்தோன்றும் இப் பெண்தெய் வத்தைக் கொற்றவை என்றும், துர்க்கை என்றும், சிம்ம வாகினி என்றும் இப்பொழுது அழைத்து வழிபடுகின்றனர்.

இத் தெய்வத்தின் உருவ அமைப்பும், அங்கங் களில் ஏந்தியுள்ள ஆயுதங்களும், ஆடையணிகலன் களின் அமைப்பும் பல்லவர் காலத்தைக் குறிக் கிறது. குறிப்பாக இராசசிம்மனின் சிற்பக்கலையை வெளிப்படுத்தும் சீரிய சான்றாக அமைகிறது.

ஒப்பிட்டு நோக்குங்கால், பலகைக் கல்லில் முன்புறம் செதுக்கப்பெற்றுள்ள இச் சிற்பம், காஞ்சி கயிலாசநாதர் கோயிலிலுள்ள சிம்ம வாகினியின் சிற்பத்துடன் ஒத்த அமைதி யுடையதாகத் தோற்ற மளிக்கிறது.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பெற்ற இச்சிற்பம்,1 200 ஆண்டுகளாகத்தொடர்ந்து வழிபாட்டில் இருந்து வருகிறது. இது மற்றொரு குறிப்பிடத் தகுந்த சிறப்பாகும்.

துவாரபாலகர் (வடக்குப் பக்கம்)

வலது காலைத் தரையில் ஊன்றி வேணு கோபாலனைப் போன்று இடதுகாலை முன்புறம் சற்று மடித்து, இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வாயிலைக் காத்து நிற்கிறது, வடபுறம் நிற்கும் துவாரபாலகர் சிலை.

வலப் புறத்துத் துவார பாலகரின் வலது முழங்கை கதாயுதத்தின் மீது அமைந்துள்ளது.

இடது கையை வலது தோளுக்கு மேலே தூக்கி,சூசி முத்திரையைக் காட்டுகிறது.

தலையில் உயர்ந்த ஜடா மகுடமும்

தலையின் பின்புறமும் பக்கங்களிலும் அடர்த்தியான தாழ் சடைகளும்

காதுகளில் பூக்களைஒத்த வட்டமான குழைகளும்

கழுத்தில் ஆரமும் கல்பதக்கமும் மணிச்சரமும்

மேற்கைகளில் கீர்த்தி முகங்களுடன் தோள்வளையும்

முன் கையில் காப்பும் வளையல்களும்

மார்பில் பூணூலும்

வயிற்றைச் சுற்றிலும் உதரபந்தமும்

இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை பளுவான ஆடையும்

காலில் சதங்கைக் கோத்த தண்டையும்

துவாரபாலகரை மிக அழகாக விளங்க வைக் கின்றன.

துவாரபாலகரின் பரந்த முகமும் வளைந்த புருவங்களும் திறந்த கண்களும் அச்சுறுத்தும் விழிகளும் புடைத்த நாசியும் திறந்தவாயும் கூரிய கடவாய்ப் பற்களும் சீற்றக் காட்சியுடன் தோற்ற மளிக்கின்றன. கருங்கல்லால் ஆன இந்த நெடிய உருவத்தின் மீது பிற்காலத்தில் சுதைப் பூசப்பட்டு வண்ணங்கள் தீட்டப் பெற்றுள்ளன.

கட்டடக் கலை

பல்லவர்கள் கட்டிய கோயில்களிலிருந்து பனை மலைக் கோயில் வேறு படுவதாக அமைந்துள்ளது. இது ஒரு சிறப்பாகும்.

இக் கோயிலின் மூன்று பக்கங்களிலும் மாடக் குழிகள் அமைந்துள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள மாடக் குழிகள் வாயில்களைக் கொண் டுள்ளன. இவை பட்டை உருளை வடிவில் அமைந்துள்ளன. வடக்குப்புற மாடக் குழியில் வாயில் அடைப்பட்டுள்ளது.



பொதுவாகக் கோயில் உண்ணாழியின் உள் பகுதியில், மூலவரை யடுத்து எத்தகைய புனைவும் காணப் பெறுவதில்லை.

ஆனால் பனைமலைக் கோயிலின் உள் நாழிச் சுவரில் மூலவருக்குப் பின்புறம் சோமாஸ்கந்தர் சிற்பம் செதுக்கப்பெற்றுள்ளது.

மாடக்குழிகள் பட்டை வடிவிலானவை. பட்டை யின் மூலையிலும், அரிமாக்கள் (சிங்கங்கள்) மிகப் பேருருவில் நின்று காணப் பெறுதல் மற்றொரு சிறப்புத் தன்மையாகும்.

இதைப் போன்ற பேருருவிலான அரிமாக் களைக் காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலிலும் காணலாம்.

இந்த அரிமாக்கள், மூலைகளி லுள்ள சுவர்த் தூண்களைத் தாங்கி நிற்பது போல் அமைக்கப் பெற்றுள்ளன.



இக் கோயிலில் ஒவ்வொரு திசையிலும் மிக அழகிய வடிவுடன் மாடக்குழி அமைந்திருப்பதும் அவற்றில் பட்டை இலிங்கங்கள் அமைந்திருப்பதும் ஒரு தனிச் சிறப்பான தன்மையாகும்.

கோயிலின் தென்புறச் சுவரீல், மேலே தோரண வாயில் செதுக்கப் பெற்றுள்ளது. தோரண வாயிலிலுள்ள சுறவங்களின் வாயிலிருந்து புறப் படும் ஒற்றைத் திருவாட்சி விந்தையானது. அச் சுறவங்கள், யானையின் துதிக்கையையும் விந்தை விலங்கின் வாலையும் பெற்றிருப்பது மற்றொரு தனித் தன்மையாகும்.

இவ் விலங்குகளின் மேற்புறம் சிறிய உருவில் கந்தருவர் அமர்ந்துள்ளனர்.

கோயிலின் அமைப்பு

இக் கோயில்,

உண்ணாழி

அர்த்த மண்டபம்

மகா மண்டபம்

திருச் சுற்று

சிற்றாலயங்கள்

ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

உண்ணாழி நடுவே பதினாறு பட்டை வடி வுடைய இலிங்கம் உள்ளது. இது தாரலிங்கம் என்னும் வகையைச் சேர்ந்தது.

உண்ணாழியில் இலிங்க உருவின், இறை யுருவின் பின்புறம் சுவரில் மேலே சோமாஸ்கந்தரின் புடைச்சிற்பம் செதுக்கப் பெற்றுள்ளது.

உண்ணாழியின் புறச் சுவர்களில் பல்வேறு சிற்றாலயங்கள் இணைக்கப் பெற்றுள்ளன.

கோவிலின் சிறப்புக்களில் மற்றொன்று, உண்ணாழியின் தென்திசையிலும், மேற்றிசை யிலும், வடதிசையிலுமாக மூன்று சிற்றாலயங்கள் உள்ளதேயாகும்.

இச் சிற்றாலயங்களில் இலிங்கங்கள் அமைந் துள்ளன.

இலிங்கங்கள் அனைத்தும் பதினாறு பட்டை யோடு கூடியவையாகும். இவை கரியநிறக் கல்லில் பளபளப்பாகவும் திரட்சியோடும் அமைந்து விளங்கு கின்றன.

கோயிலின் கட்டடங்கள் சாம்பல்நிறக் கருங் கல்லைக்கொண்டு கட்டப் பெற்றுத் திகழ்கின்றன. இது கவனிக்கத் தக்கது.

இராசசிம்மன் காலத்து ஏனைய மாமல்லைக் கடற்கரைக்கோயிலும் காஞ்சி கயிலாசநாதர்கோயிலும் கடற்கல் (மணற்கல்) கொண்டு கட்டப்பெற்றிருக்கின்றன. பனைமலையில் மலைமீது அமைந்த இக் கோயில் மட்டும் சாம்பல் நிறம் வாய்ந்த உறுதியான கருங்கற்களைக் கொண்டு கட்டப் பெற்றுள்ளன.

கோயிலின் வெளி அமைப்பு

கோயிலின் புறச் சுவர்,

உபானம்

உபபீடம் (துணைப் பீடம்)

விரிந்த பத்மம்

முப்பட்டைக் குமுதம்

கண்டம்

பட்டிகை

வேதிகை

ஆகிய உறுப்புகளைக் கொண்டு விளங்குகிறது.

துணைப் பீடத்தைச் சுற்றிலும் மழை நீர் வெளியேறும் வகையில் நீர்த்தாரைகள் அமைக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

பத்மம் மிகப் பெரியதாக மிளிர்ந்து வனப்பூட்டுகிறது. அதன் முனைப் பகுதிகள் இலைக் கருக்குகளுடனும் வேலைப்பாடு மிக்கதாகவும் அழகாக அமைக்கப் பெற்றுள்ளன.





மலைமீதுள்ள பனைமலைநாதர் கோயில் கட்டட வரைபடம்

நன்றி : பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், புதுவை.

ப—5



கோபுரத்தின் முதல் இரண்டு அடுக்குகளின் வரைபடம்



A

பனைமலை மலைமீதுள்ள பனைமலைநாதர் கோயில்
கீழ்க் கட்டடத்தின் இடைப் பகுதி வரைபடம்

பனைமலைநாதர்
கோயிலின்
மேற்குப்புறத் தோற்றம்

(அடுத்த பக்கம்) ——→

நன்றி : பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், புதுவை.









மலைக்கோயில் பனைமலைநாதர் விமான முதல் அடுக்கில் உள்ள இடைப்பகுதி

←—— கோயிலின் குறுக்குத் தோற்றம்— வடமேற்கு



கோபுர உச்சி விமானத்தின் வரைபடம்

இலைக் கருக்குகளின் எழிலான தோற்றம்



முப்பட்டைக் குமுதம் பெரிய வடிவுடன் கொடி வளைவுகள், பூமாலைகள் போன்ற உருவங்களை வரிசையாகக் கொண்டு வனப் பூட்டுகிறது.

முப் பட்டைக்கு மேலுள்ள இடம், 'கண்ட' கம்பு என்பது எளிமையாக அமைந்துள்ளது.

கண்டத்தின் இடையிடையே உள்ள படைகளில் நீண்ட துதிக்கையும் கூர்மையான தந்தங்களை யும் கொண்ட களிறுகளும், இன்னுஞ் சில இடங்களில் பிடிகளும், மாறி மாறியமைந்து அழகு செய்கின்றன.

இவ்வாறு கண்டப் படையில் யானையின் உருவினைப் புகுத்திப் புதுமை செய்துள்ளனர் பல்லவர் காலச் சிற்பிகள்.

பட்டிகையின் முகப்பில் பல்லவர்க்கால கிரந்தக் கல்வெட்டுகள் வனப்போடு வெட்டப்பட்டுள்ளன.

இக் கோயிலின் புறச்சுவர் சுற்றிலும் மூன்று சிற்றாலயங்கள் உள. அவற்றில் பாய்ந்து நிற்கும் சிம்மங்களின் உருவங்களை உடைய தூண்கள் பாங்குற அமைக்கப் பெற்றுள்ளன.

இச் சிம்மங்கள் பின் கால்களைப் பீடத்தில் ஊன்றி, முன் கால்களை மேலே தூக்கி, நிமிர்ந்து நிற்கின்றன. நிற்கும் சிங்கங்களின் வால்கள் சுருண் டுள்ளன. அதன் கால் நகங்கள் கூர்மையானவை.

வலுவானத் துடைகளையும் உறுதியான கால்களையும் பெற்றிருக்கும் இச் சிம்மங்களின் முகங்கள் இயற்கையாக அமைந்துள்ளன.





சிம்மங்கள் பரந்த முகமும் திறந்த வாயும் நெளிந்த புருவமும் பிதுங்கிய கண்களும், பக்கங் களில் உயர்ந்த காதுகளும், முகத்தைச் சுற்றிலும் தாடியும் பெற்றுத் திகழ்கின்றன.

சில சிம்மங்கள் கூரிய பற்களையும் நீண்ட கோம்புகளையும் உடையனவாகப் படைக்கப் பெற்றுள்ளன.

பல்லவர்க்கே உரித்தான பாயும் சிம்மங்களை அங்கமாகக் கொண்ட தூண்கள், புறச்சுவர்களை நன்கு அணி செய்கின்றன.

இந்தத் தூண்கள்,

அடி

உடல்

இடை

கலசம்

பத்மம்

பலகை

போதிகை

ஆகிய உறுப்புக்களைப் பெற்றுக் கொடுங்கையின் உட்புறம் செருகப் பெற்றுள்ளது போல் அமைந்துள்ளன. இது மிகவும் சிறப்பானவையாகும்.

இக் கோயிலின்

பிரஸ்தரப் பகுதி,

எழுதகம்

கபோதம்

யாளிவரி (சிம்மங்களின் வரிசை)

ஆகிய உறுப்புக்களைக் கொண்டது.

கொடுங்கையின் கீழ், (சோழர் காலத்தது போன்று) கபோதம், பூதகணங்கள் காணப் பெறவில்லை. அப் பகுதி எளிமையான அமைப்புடையதாக விளங்குகிறது.

கபோதத்தைச் சுற்றிலும் கீர்த்தி முக நாசிக் கூடுகள் அழகு செய்கின்றன.



நாசிக் கூடு — ஒரு வகை



நாசிக் கூடு — மற்றொரு வகை



இந் நாசிக் கூடுகளில், முந்திய பல்லவர்காலக் கோயில்களில் உள்ள கந்தர்வ முகங்கள் — காட்டப் பெறவில்லை; எளிய கிரசங்கள் மட்டும் வெவ்வேறு வடிவங்களில் காட்டப் பெற்றுள்ளன. கபோ தங்களின் முனைப் பகுதியில் உள்ள கொடுங்கை களின் மீது இலைக் கருக்குகளும் பூ விதழ் களும் வெட்டப் பெற்றுள்ளன. அதன்மீதுள்ள யாளிகள் வரிசையாகக் காட்டப் பெறாமல் இடை வெளி விட்டு அமைக்கப் பெற்றுள்ளன. யாளிகளின் கீழே இடையிடையே கல்வெட்டுக்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

பிரஸ்தரத்தின் மேலேயுள்ள உச்சி விமானம் இரண்டு தளங்களை யுடையது. தளங்களைச் சுற்றிலும் கர்ண கூடங்களும் சாலைகளும் மாறி மாறி அமைந்துள்ளன.

கர்ணகூடங்கள் முழுமையாக உயர்ந்து விளங்குகின்றன. சாலைகளின் முன்புறம் அகன்று விரிந்த விமான (கோஷ்டம்) மாடங்கள் அமைந்து, அம் மாடங்களில் திசைகளுக்கு உரிய தெய்வங்களைக் கொண்டு விளங்க வேண்டும்.

சாலையின் மேற்குக் கோஷ்டத்தில் மட்டும் சங்கு சக்கரம் ஏந்திய திருமாலின் அமர்ந்த கோலம் அழகு செய்கிறது.

வடதிசை (கோஷ்டம்) மாடத்திலும் தென் திசை மாடத்திலும் சிற்பங்கள் ஏதும் இல்லை.

பிற்கால விமானங்களில் காணப்பெறும் சமய உருவங்களோ, விமானந்தாங்கிகளின் உருவங்களோ, திசைத் தெய்வங்களின் உருவங்களோ பணைமலைக் கோயிலில் இல்லை.

எளிமை மிக்க இடைப்பட்ட இடங்கள் யாவும் எழிலுருப் பெற்று விளங்குகின்றன.

இக் கோயில், அதிட்டானம் முதல் விமானத் தளங்கள் வரை கருங்கல்லால் அமைக்கப் பெற்றுள்ளன

பண்டைய நாளில், இக் கோயில் அதிட்டானம் முதல் ஸ்தூபி வரையில்—மாமல்லைக் கடற்கரைக் கோயில் போன்ற — கருங்கல்லால் அமைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

காலவெள்ளத்தில் பழைய விமானத்தின் சிகரமும் ஸ்தூபியும் சிதைந்து விடவே, பிற்காலத்தில் செங்கல்லும் சுதையும் கொண்டு விமானச் சிகரத்தை அமைத்துள்ளனர்.



புதியதான இந்தச் சிகரம், வட்ட வடிவில் அமைந்துள்ளது. 'வேசர வகை' என்பதும் சிகரமாக இது கருதப் பெறுகின்றது.

சிகரத்தைப் போன்றே கிரீவமும் வட்ட வடிவில் அமைந்துள்ளது. கிரீவத்தைச் சுற்றிலும் உள்ள கிரீவ கோஷ்டங்களில் சிற்பங்கள் இல்லை.

சிதைந்துவிட்ட சிகரத்தைச் சீர் அமைத்தபோது சிகரத்தின் கீழ், செங்கல்லால் சிறிய தளத்தையும் அமைத்துள்ளனர். இதையும் சேர்த்து எண்ணிப் பார்ப்போமானால், இக் கோயில் மூன்று தளங்களை யுடையதாகத் தோன்றும்.

ஆனால், தற்போது உள்ள இரு கருங்கல் தளங்கள் மட்டும் பழமை யானவை.

இப்பொழுது சிகரத்தின் மீதுள்ள ஸ்தூபி உலோகத்தால் ஆனது.

பிபாதுவாகப் பிற கோயில்களில் உண்ணாழியைச் சுற்றிலும் அமைக்கப் பெற்றுள்ள தேவ கோஷ்ட (மாட)ங்களும் அதற்குரிய தெய்வச் சிலைகளும் இங்குக் காண முடியாது. அதற்கீடாக உண்ணாழியைச் சுற்றிலும் சிற்றாலயங்களை அமைத்து, அதில் பதினாறு பட்டை இலிங்கங்கள் அமைத்துள்ளனர்.

உண்ணாழியில் இறைவர்க்குத் திருமுழுக் காட்டிய புனித நீரை வெளியே கொண்டுவர, புறச் சுவர்களில் நீர்த் தாரை என்னும் தூம்புகள் அமைக்கப் பெற்றுள்ளன.

பட்டை வடிவிலான இலிங்கங்களையும்,

தனித் தன்மை வாய்ந்த அமைப்போடு உண்ணாழியில் சோமாஸ்கந்தர் சிற்பத்தையும்,

ஒற்றைத் திருவாட்சியையும்

மிகச் சிறப்பான இடங்களில் பொருத்தமாகப் பெற்றுள்ள இப் பனைமலைக் கோயில், எடுப்பிலும் தோற்றத்திலும் தனித் தன்மை வாய்ந்தது.

காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலின் சிறு போலிகையே பனைமலைக் கோயில் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வளர்ந்துத் திகழ்ந்த பல்லவர் கட்டடக் கலைக்கு இந்தப்

பனைமலைக் கோயிலும்
காஞ்சி கயிலாச நாதர் கோயிலும்
மல்லைக் கடற்கரைக் கோயிலும்

சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

இம் மூன்று கோயில்களும் ஒரே காலத்தில்

ஒரே (கட்டடக் கலைப்) பாணியில்

இராசசிம்மனால் கட்டப் பெற்றவையாகும்.

எழிலார் ஓவியங்கள்

பனைமலைச் சிவன் கோயிலின் உண்ணாழி, சுவர்களோடு வெளிப் பக்கம் இணைந்தவாறு கிதற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் மூன்று சிறிய கோயில்கள் உள்ளன.

அவற்றுள் வடக்குப் பக்கமுள்ள கோயிலின் உன் சுவர்களில் பல்லவர் காலத்திய வண்ண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ் வோவியங்களைப் பற்றிய செய்திகளை முதன்முதலில் பதிப்பித்து வெளியீடு வாயிலாக, ஆராய்ச்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தவர், புதுவையிலுள்ள பிரஞ்சு இந்தியப் பண்பாட்டுக் கலைக் கழகத்தில் பணியாற்றிய, திரு. P.Z. பட்டாபிராமன் (செட்டியார்) அவர்களேயாவர்.

இவர், பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர் கபிரியேல் ழுவோ துப்ராய் அவர்களிடம் பணியாற்றியவர் என்பது உளங் கொளத் தக்கது.*

*தொல்பொருள், கோயில் தொடர்பான கலைகள், பிற துறைகள் ஆகியவற்றில் தேர்ந்த அறிஞராகத் திகழ்ந்தவர் திருமுடி ந. சேதுராமன் (செட்டியார்) அவர்கள். தில்லிப் பாராளுமன்ற உறுப்பினராகவும் புதுவை நகராட்சியில் உதவி மேயராகவும் மக்கள் தொண்டாற்றியவர். வரலாற்றுத் துறையில் திரு. பட்டாபிராமனாருடன் திருமுடியாரும் குறிப்பிடத் தக்கவராவார்.

பனைமலை ஓவியம்

'தாள சம்யோதிதம்' எனும் பாணியில் — பனைமலை ஓவியம் உள்ள தென்பது ஆய்வாளரின் கருத்து. இவ் வோவியம் வழக்கத்துக்கு மாறானது; சிறப்பாகக் காட்சி நல்குகிறது.

இது, அஜந்தா, பாதாமி என்னும் இடங்களில் உள்ள பெண்களின் ஓவியங்களை நினைவூட்டுகின்றது.

வலது காலை ஊன்றி, இடது காலை, மடக்கி நிற்கும் நிலையில் அம்மனின் ஓவியம் காணப்படுகிறது.

அம்மனின் தலைக்கு மேல், பல்லவர் பாணி சாந்துக்குடை தீட்டப் பெற்றுள்ளது.

தொண்டை மண்டல ஓவியங்களில் குறிப்பிடத்தக்கச் சிறப்புடையது இந்த ஓவியமே.

இதே அமைப்பில் காஞ்சி கயிலாசநாதர் கோயிலிலும் உள்ளது.

தலையில் மணிமகுடம்
கழுத்தில் மணிமாலை
காதில் குழையுடன்

இவ் வண்ண ஓவியம் விளங்குகின்றது.

இடக் காலை மடக்கி, வலக் காலால் ஒயிலாக நின்றுள்ள காட்சி கவின்மிகு காட்சி யாகும்.

இடையில் அணிந்துள்ள மேலாடை, பூ வேலைப்பாடு கொண்டது.

பெருமானின் நடனத்தைக் கண்டு பார்வதி மெய்மறந்து நிற்கும் தோற்றத்தை இவ் வோவியத்தில் காணலாம்.

இவ் வண்ண ஓவியம்,

கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அமராவதி சிற்பத்தைப் போலவும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜந்தா குகை ஓவியங்களைப் போலவும் காட்சி தருகின்றது.

மகுடத்தின்மீது குடை ஒன்று உள்ளது. குடை நீல வண்ணம்,

கருப்பு நிற மென்மையான கோடுகளாலு மகுடம்,

முகம் இளமஞ்சள்,
உடல் இளஞ்சிவப்பு[2]
மேலாடை சிவப்பும் மஞ்சளும் கலந்த வண்ணத்தில்* காட்சியளிக்கிறது.

*தமிழகக் கோயிற்கலைகள் — பக். 103.
—திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,

ஓவியம் — ஊழிக்கூத்து



வட திசையிலுள்ள சிற்றாலயத்தில் இலிங் கத்தின் பின்புறம் ஆடும் பெருமானின் வண்ண ஓவியம் தீட்டப் பெற்றுள்ளது. பெருமான் வலது காலை ஊன்றி, இடது காலை மேலே உயர்த்தி ஊழிக்கூத்து ஆடுகிறார். கைகளில் உள்ள ஆயுதங் களும் முகமும் கீழுடலும் இப்பொழுது தெளி வாகத் தெரியவில்லை.

இப்பொழுது, வலது கைகளில் ஒன்று மார்புக்குக் குறுக்கே - கஜ அஸ்தத்தில் - நீட்டி யுள்ளது. கழுத்தில் உள்ள ஆபரணங்களும், மேற்கை யிலுள்ள புஜ வளையங்களும், முன் கையில் உள்ள காப்பும் கை வளையல்களும் தெளிவாகத் தெரி கின்றன.



ஏனைய கைகளைக் குறிப்பாகக் காட்ட, பல்ல வர் கால ஓவியர்கள் தீட்டிய வண்ணக் கோடுகள் மட்டும் இன்று நாம் காணுமாறு உள்ளன.

ஆடுகின்ற அண்ணலின் ஊழிக்கூத்தை ஒயிலாக நின்று காணுமாறு பார்வதியின் ஓவியம் பக்கச் சுவரில் படைக்கப் பெற்றுள்ளது.

அம்மன் கோயில்

இக் கோயில் முகமண்டபத்தின் வடகிழக்குத் திசையில் அம்மன் சன்னதி அமைந்துள்ளது. அது தென்திசை நோக்கி அமைக்கப் பெற்றுள்ளது. உண்ணாழி நடுவே, நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் அம்மனின் உருவம் காட்சி தருகிறது.

அம்மனின் மேற் கைகள் அங்குசத்தையும் பாசத்தையும் பிடித்துள்ளன.

கீழ்வலக்கை அபயம் அளிக்கிறது.

இடக் கை வரத முத்திரையில் வழங்கும் கரமாக அமைந்துள்ளது.

மகுடம், மகர குண்டலங்கள், கண்டமாலை, தோள்வளை, கைவளைகள், இடைக் கச்சை, பாத சரம் முதலிய அணிகள் யாவும் அம்மனின் திருமுடி முதல் திருவடிவரை வனப்பூட்டுகின்றன.

நன்கு அமைந்துள்ள இவ் அம்மன், நாயக்கர் காலத்தது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டு எனலாம்.

அம்மன் அஸ்ததாளாம்பிகை என்ற பெயரில் வழிபாட்டி லுள்ளது.

சோழர் காலத்து அம்மன் சிலை, தலையில்லாமல் வெளியே வைக்கப் பெற்றுள்ளது. சிவன் கோயில் தோற்றுவிக்கப் பெற்ற காலத்தில், அம்மனுக் கென்று இங்குத் தனிக் கோயில் இல்லை, பிற்காலக் கட்டட வளர்ச்சிகளில் கோயிலை விரிவுபடுத்தியபோது அம்மனுக் கென்று தனிச் சன்னதியை நிறுவியுள்ளனர்.

சிவன்கோயிலைச் சுற்றிலும் பரிவார ஆலயங்கள் பண்டைய நாளில் அமைக்கப் பெற்றிருக்க வேண்டும். பல்லவர்காலக் கோயிலுக்குரிய பரிவார தெய்வ உருவங்கள் ஒரு சிலவற்றைத் தவிர இப்போது ஏதும் இங்கு எஞ்சி நிற்கவில்லை.

இக் கோயில் முகமண்டபத்தில் தற்போதுள்ள ஜேஷ்டா தேவி, பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாகத் திகழ்த்திருக்கலாம். சோழர் காலத்தில் (கி. பி. 9 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை) சண்டிகேஸ் வரர்க்கும் நாயக்கர் காலத்தில் (கி.பி. 17 ஆம் நூற்றாண்டு) பைரவர்க்கும் விநாயகர்க்கும் ஆறுமுகப் பெருமானுக்கும் பரிவாரத் திருமேனிகள் எடுத்துள்ளனர்.

ஆனாலும் அவை தற்போது உரிய இடங்களில் இல்லாமல், கோயில் முகமண்டபத்திலும் முன்புறத் திலுமாகக் காணப் பெறுகின்றன.

முன்மண்டபம் (16 கால் மண்பம்)

முகமண்டபத்தின் முன்புறம், நாயக்கர் காலத்தில் முன் மண்டபம் ஒன்று அமைத்துள்ளனர். அதில் வரிசைக்கு நான்கு தூண்கள், வீதம் நான்கு வரிசைகளில் பதினாறு தூண்கள் உள்ளன.

இத் தூண்கள், மேல் கீழ் நடுப் பகுதிகள் சதுர வடிவுடையவை. இடைப் பகுதி எட்டுப் பட்டைகள் உடையவை.

இவை தவிர, முழுதும் சதுர வடிவான தூண்களும் உள்ளன.

திருச்சுற்று மண்டபம்

இக்கோயிலைச் சுற்றிலும் வலம் வருவதற்கா நாயக்கர் காலத்தில் திருச்சுற்று மண்டபம் அமைக்கப் பெற்றுள்ளது.

இப்போது கோயிலின் கீழ், தென் திசைகளில் உள்ள மண்டபம் மட்டும் எஞ்சியுள்ளது.



நெடிய தூண்களில் கீழ்ப்புறம் பல்வேறு சிற் பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. அமர்ந்த சிம்மம், பாயும் யாளி, குரங்கு, மத்தளம் கொட்டும் கலைஞன், இலிங்கம் ஆகியவை பொறிக்கப் பெற்றுள்ளன.

தூண்கள் கீழ்ப்புறம் செவ்வக வடிவிலும் மேல் பகுதி சதுர வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்த்திசை தென்திசை இவற்றில் ஐம்பத்தைந்து நெடிய தூண்கள் உள்ளன.

அம்மன் கோயிலின்முன் பதினாறு தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்று உள்ளது.

செப்புத் திருமேனிகள்

பல்லவர் காலத்திய எழிலார்ந்த செப்புத் திருமேனிகள் பல இக் கலைக் கோயிலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். அவையெல்லாம் என்ன ஆயினவோ?

ஆயினும் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த உமாசகித சந்திர சேகரரின் ஆழகிய செப்புத் திருமேனிகளை இங்கே இப்பொழுது காண்கிறோம்.



இடைக்காலக் கல்வெட்டுக்கள்

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையினர், சிவன் கோயிற் பகுதியில் கல்லெழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற இரண்டு துண்டுக் கற்பலகைகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

அது, முதற்குலோத்துங்க சோழனின் முதலாம் ஆட்சி ஆண்டில் வரையப் பெற்ற கல்வெட்டாகும். முழுமையும் கிடைக்க வில்லையாயினும், நாட்டுப் பிரிவு உள்ளிட்ட செய்திகளை அறிந்து கொள்ள அக் கல்லெழுத்துப் பெரிதும் பயன்தரத் தக்கது.

பனைமலைக் குன்றுடையார்க் கோயில் அர்த்த மண்டபத்துத் தெற்குப் பீடத்தின் பதுமப் பகுதியில், மிகவும் பொரிந்துச் சிதைந்து விட்ட நிலையில், அதே மன்னன் காலத்திய சாசனம் ஒன்று காணப் பெறுகிறது.

அது, அம் மன்னனின் மெய்க்கீர்த்தியை அறிவிக்கும் அளவிலேயே நின்று விட்டது. செய்திகளை உணர்த்தும் பகுதிகள் முற்றிலும் சிதைந்து விட்டன.

இவை இரண்டும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ள சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் என்பது குறிப்பிடத் தக்கது.[1]

மகாமண்டபத்தின் தெற்குப் படிகளிலும் வெளி மண்டபத்தின் பீடத்திலுமாக மேலும் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன.

இவை யெல்லாம் பிற்காலத்திய கல்வெட்டுக்களாயினும் 16ஆம் நூற்றாண்டுச் செய்திகளை அறிந்து கொள்ள உதவுபவை.[2]

---

1. கல்வெட்டு எண் : 1
2. கல்வெட்டு எண் : 2

பெருமாள் கோயில்

கலைக் கோயிலால் பொலிவு பெற்ற குன்றுக் குத் தெற்கே, பனைமலை எனும் ஊர் உள்ளது ஊரின் நடுவிடத்தே - மேற்கில், சென்ன கேசவப் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது.

அக் கோயிலின் குமுதப் படைகளில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன.

> இதுகாறும் வெளி உலகம் அறியாத அக்கல்வெட்டின் வாசகங்களை இந்நூலின் பின் இணைப்பில் சேர்த்துள்ளோம்.[1]

இப் பகுதியின் பழமை வரலாற்றுக்கு அவை பெருமளவு உறுதுணை புரிகின்றன.



1. கல்வெட்டுகள் எண் : 6 — 12

உடையார் கோயில்

இன்றுள்ள பனைமலை ஊருக்குக் கிழக்கே, புன்செய் வெளியில், சிதைந்த நிலையில் சிவன் கோயில் காணப்படுகிறது. முன்னொரு காலத்தில் சீரும் சிறப்பும் மிக்குப் பொலிவுடன் திகழ்ந்த அக் கோயில், இன்று கூளிக் குறுகிச் சிதைந்தும் சீரழிந்தும் பேரிழந்தும் காணப் பெறுகிறது.

இக் கோயிலை அலங்கரித்த சிற்பங்களும் பிறவும் என்ன ஆயினவோ! எங்கே உள்ளனவோ! யாரிடம் அடைக்கலம் புகுந்தனவோ!

அறியாமையால் அழிந்தனவோ! அழிக்கப் பட்டனவோ! அவனையன்றி அறிந்தவர் யாரும் இலர்!

இச் சிவன் கோயிலுக்கும் பெருமாள் கோயி லுக்கும் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொடர்புகள் பற்றிக் கல்வெட்டுக்கள் பேசுகின்றன.



ஆ தீண்டு குற்றி !

மேய்ச்சலுக்காகக் காலை நேரத்தில் ஊரை விட்டுச் செல்லுகின்ற ஆநிரைகள், மாலை நேரத்தில் ஊருக்குள் நுழையும்போது, வழியில் நடப்பட்டுள்ள கருங்கற்களின் மீது தத்தமது உடல்களைத் தேய்த்துக் கொள்வது வழக்கம்.

அக் கல்லை 'ஆ தீண்டு குன்றி' என்று கூறுவது இலக்கிய வழக்கு.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் 49 ஆவது சூத்திரத்திற்குச் சேனாவரையர் உரை எழுதுங்கால்,

> 'ஒன் றென முடித்தல் என்பதனான்,
> அரசர் பெருந் தெரு, வயிரகடகம்,
> ஆதீண்டு குற்றி, ஆனதர், எருத்தில்
> எனப் பொதுச் சொல்லின்றி
> வருவனவுங் கொள்க'

என்கிறார்.

> பூத்த கோங்குபோற் பொன்சு மந்துளா
> ராய்த்தி யர்நலக் காசெ றுணனான்
> கோத்த நித்திலக் கோதை மார்பினான்
> வாய்த்த வந்நிரை வள்ளு வன்சொனான்.

ஆசெல் தூண் - ஆ தீண்டு குற்றி' எனப்படும் என்று 'சீவகசிந்தாமணி'யில் திருத்தக்க தேவர் கூறியுள்ளார்[1].

1 சீவகசிந்தாமணி : செய்யுள் 419

பனைமலையிலும் ஊரின் நடுவிடத்தே இப்படிப் பயன்படுகின்ற கருங்கற் பலகை ஒன்று இன்றும் இருக்கிறது.

வீதியின் ஓரத்தில் வாய்க்காலுக்கு அருகில் நடப்பட்டுள்ள அக் கற் பலகையில், மாடுகள் உராய்ந்தனவோ! மனிதர்களும் உராய்ந்தனரோ! நமக்குத் தெரியாது. ஆனால் கல்லெழுத்துக்கள் தேய்ந்து தேய்ந்து கல்முழுதும் வழவழப்பாக மாறி விட்ட கொடுமையைக் காண்கிறோம்.

கல்லெழுத்துக்கள் கூற வந்த செய்தீகள் காலப் போக்கில் கரைந்து மறைந்துவிட்டன.

16 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட இக் கல்வெட்டு —

பிரஜாபத்தி ஆண்டு தை மாதம் இருபத்து நான்காம் தேதி வரையப்பட்டது என்பதும்,

நஞ்சனப் பேட்டை என்னும் ஊரின் பெயரையும் தவிர, மற்றவை மறைந்துவிட்டன.*

* 619 of 1916

நடுகல் நாயகம்

பலைமலைப் பேட்டையில்,* பெரு வழியின் ஓரத்தில், வீரன் ஒருவனின் உருவம் பொறித்த நடுகல் ஒன்று உள்ளது. அவ் வீரனின் உருவம் இடப் பக்கம் பார்த்தவாறு உள்ளது அவன் கைகளில் பிடித்துள்ள நீண்டதொரு வேலினால், பாய்ந்து சென்று குத்துவதைப் போல அமைக்கப் பெற்றுள்ளது.

இந்த நடுகல்லில் கல்வெட்டு ஏதும் இல்லை. ஆயினும் இவ் வுருவம் ஏதோ ஒரு நிகழ்ச்சியை அடியொற்றி அமைக்கப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

சென்னகேசவப் பெருமாள் கோயிலில் கிடைத்த கல்வெட்டுக் குறிப்புடன் இவ் வுருவத்துக்குத் தொடர்பிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதுவும் இப் பகுதியில் உள்ள பழமைச் சின்னங்களில் ஒன்றே!

இப் பகுதியில் எடுத்துக் காட்டியவை தொல் பொருள் சான்றுகள்.

பனைமலைப் பகுதியின் வரலாற்று மூலங்கள் இப்பொழுதும் காணக் கிடக்கும் ஆதாரங்களே யாகும்.

கற்பனைக்கு வரலாற்றில் இடமில்லை. இங்குள்ள தொல்லியல் சின்னங்கள் வரலாறு படைக்கின்றன.

அடுத்து வரும் பகுதிகளில் அவை பற்றி அறிந்து கொள்வோம்.



* பனைமலைக்குத் தெற்கிலுள்ள ஊர் பேட்டை

கல்மேல் எழுத்தரைக் கண்டு கொள்வீரே!

இராசசிம்மன் (கி. பி. 700—730)

வெற்றியுடையவன்

ஆற்றல் மிக்க அழகிய செயலை யுடையவன்

நிகரற்ற வீரன்

அரசச் செல்வியினால் காக்கப் பெறுபவன்

சிவபெருமானின் திருவடியை மௌலியாகக் கொண்ட பெரியோன்

யானைகளை யொத்த பகைவர்களைச் சிங்கம் போல அஞ்சுவித்துக் கொன்றவன்

பரந்த நற்புகழாளன்

குடிமக்கள் நன்மையை நாடுகின்றவன்

இப்படி எல்லாம் புகழ்ந்து குறிப்பிடுகின்ற ஒரு மாமன்னன் உண்டென்றால், அவன் இராச சிம்மனே!

பல்லவர் குலத் தோன்றல்களில் சிறப்பு மிக்க கலைஞனும் இவனே!

இப் பெருமைக் குரியவன்தான் ஆயிரத்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு பனைமலைக்கு வந்தான்; குன்றேறி நின்றான்! குன்றுடையார்க்குக் கோயிலை எடுப்பித்தான்!

வெறும் கோயிலா?

இல்லை, இல்லை.

புதுமைக் கோயில்!

அழகுக் கோயில்!

அற்புதக் கோயில்!

இந்தக் கலைக் குரிசிலின் கீர்த்தி மிக்க மரபினையும் இனிக் கருதத் தகும்.





நன்றி : பல்லவர் வரலாறு — டாக்டர் மா. இராசமாணிக்கனார் (கழக வெளியீடு)

மூலவர் (உண்ணாழி சிவலிங்கம்) ——→





முன்புற வெளி மண்டபம் (கிழக்கு)



ப—8

தாரலிங்கம் ——→



சிவன் பார்வதி செப்புத் திருமேனிகள்
(பதினாறாம் நூற்றாண்டு)



மூலவருக்குப் பின்புறச் சுவரில் உள்ள
சோமாஸ்கந்தர்
(சிவன் — பார்வதிக்கு இடையில்கந்தன்)



முன் அறை சுவரில் அமைந்துள்ள சிற்பம்
திருமால், திருமகள்



முன் அறை சுவரில் காட்சிதரும் சிற்பம்
நான்முகன், கலைமகள்



தென்புறக் கோபுரத்தின் அடிப்பகுதியில் உள்ள
அழகிய கந்தருவர் (பூதகணம்) பக்கம்31



அம்மன் கோயில்



அம்மன் சிலை
பிற்காலச் சோழர் காலம்



திருமகள் தவ்வை (மூதேவி)
பல்லவர் படைப்பு · இக்கற் சிற்பம் தனியாகக்
காணப்படுகிறது.



பனைமலை ஊரின் மேற்கிலுள்ள பெருமாள் கோயில்



பனைமலை ஊர்கிழக்கில் சாலையோரம்
சிதைந்துள்ள (சிவன்) உடையார் கோயில்



நடுகல்
பனைமலைப்பேட்டையில் சாலையில் உள்ளது.

பல்லவர் தோற்றம்

இந்தக் கலைப் பெருமகனை ஈன்றெடுத்த பெருமை, பல்லவர் குலத்தைச் சாரும்.

பல்லவர்குலத் தோற்றம் பற்றிப் பட்டயங்கள் பல பேசுகின்றன. கல்மேல் எழுத்துக்கள் கவி மழை பொழிகின்றன.

அசுவத்தாமாவுக்கு மதனி என்னும் தேவ மக ளிடம் ஓர் ஆண் மகன் பிறந்தான். அவனிட மிருந்தே பல்லவர் குலம் தோன்றியதாக அமராவதி யிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. அது சிம்மவர்மன் காலத்துக் கல்வெட்டு.[1]

துரோணரின் மகனான அசுவத்தாமாவுக்கு மேனகையின்பால் பிறந்த மகனிடமிருந்து இக்குலம் தோன்றியதென்று வேலூர்ப்பாளையம் செப்பேடு கூறுகிறது. இது நந்திவர்மன் காலத்துச் செப்பேடு[2].

இதே செய்தியைக் 'காசாக்குடி' ஊர்ப் பட்ட யமும் உறுதி செய்கிறது.[3]

திருமாலின் உந்திக் கமலத்தினின்றும் பிரம்மா தோன்றினார். அவரிடமிருந்து அங்கிரஸ் தோன் றினார். அவருக்குப் பிரகஸ்பதி தோன்றினார். பின்னர், சம்யு, பரத்துவாஜர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றினர்.

அதாவது, பிரகஸ்பதிக்கு மகனாக சம்யு பிறந்தார்; இவருக்கு மகனாகப் பரத்வாஜர் உதித்தார். பரத்வாஜர்க்கு மகனாகத் துரோணரும், அவருக்கு மைந்தனாக அசுவத்தாமனும் தோன்றி னார். அதன் பின்னரே பல்லவன் பிறந்தான்.

பெரும்பான்மையான பல்லவரின் பட்டயங்கள் இவ் வரிசையைப் பின்பற்றிக் கூறுகின்றன. பல்ல வர்கள் பாரத்வாஜ கோத்திரத்தினர் என்று புகழப் பெறுவது உண்டு. பரத்வாஜரிலிருந்தே பல்லவர் களின் வரலாற்றுக் காலம் தொடர்வதை இது உறுதி செய்வதாக இருக்கலாம்.

பல்லவர்கள், தம்மைத் திருமாலின் வழிவந்த வர்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைந் தனர்.

திருமாலும் அரசனும் ஒன்றே என்று எண்ணு கின்ற வழக்கம் அக்காலத்தில் முற்றிலும் நீங்கிவிட வில்லை.

ஆதலின், ஒவ்வொரு அரச குலத்தவரும் தம்மைத் தேவர்களின் அல்லது முனிவரின் வழி வந்தவர்கள் என்று கூறினர். அன்றைய சமுதாயம் அவர்களை இறையாகவே மதித்தது. சங்க காலந் தொடங்கி இப் பழக்கம் தொடர்ந்து வந்துள்ளது.

---

1. மாமல்லை—பக். 12—13 திரு Dr. இரா.நாகசாமி
2. S. I. I. Vol. III. Part V
3. S. I. I. Vol. II Part III

பல்லவர்கள் தம்மைத் திருமாலின் வழியின ராகக் கூறிக் கொண்டாலும், அவர்களில் பெரும் பாலோர் சைவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

குல முதலை ஆராய்ச்சி வழக்கம் அன்றைக்கு இல்லை. இன்றைக்கு அவற்றை ஆராய்ந்து காண்பதே ஆராய்ச்சியாகிவிட்டது. ஆகவேதான், 'பல்லவர்கள் யார்?' என்னும் வினா எழுந்தது.



பல்லவர்கள் யார்?

அறிஞர்கள் இவ் வினாவிற்கு விடை தேடினர். அதன் விளைவாகப் பல விதக் கருத்துக்கள் தோன்றின,

வட இந்தியாவில் இருந்து இங்கு வந்த பஹ்லவர்கள்.

மணிபல்லவத் தீவினின்றும் வந்தவர்கள்.

தக்காணப் பகுதியை ஆண்ட சாதவாகனரின் பிரதிநிதிகள்.

கன்னட நாட்டினின்றும் வந்தவர்கள்.

தெலுங்கு நாட்டினின்றும் வந்தவர்கள்.

தமிழ் நாட்டுக் கள்ளர் குலப் பெரு மக்கள்

—எனப் பல்லவர்கள் பற்றிப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின.

இவர்கள் யார் என்பது நமக்கு முக்கியமல்ல. இவர்களால் நாட்டுக்கு என்ன பயன் விளைந்தது என்பதே முக்கியம்.

பயன் விளைந்தது!

சங்க காலம் முதல் கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரைத் தமக்குள் மாறுபட்டுப் போரிட்டும் தமிழ்ப் பெருநாட்டில் அமைதி குலைத்தும் வந்த சிற்றரசர் களின் சிறுசிறு நிலப்பரப்புக்களை எல்லாம் ஒருங் கிணைத்து, ஒரு பேரரசுக்கு வழிகோலியவர்கள் பல்லவர்கள் என்பது தெளிவு.

சங்க காலத்துக்கும் பல்லவர் காலத்துக்கும் இடையில் நிலவிய களப்பிரரின் ஆட்சி, பேரரசாக மேலோங்கி இருந்தமைக்குத் தகுதியான சான்றுகள் இல்லை. அப்படி இல்லாதபோது, அப் பணியை முதன் முதலாகப் பல்லவர்களே செய்தார்கள் என்று கொள்வதில் தவறில்லை.

சங்க காலத்து முடியுடை மூவேந்தர்கள் கூட இத்தகைய உன்னத நிலைக்கு உயர்ந்திருக்க வில்லை. தமிழகம் முழுமையும் ஒரு குடைக் கீழ் ஆளப்படவில்லை.

பல்லவர் குலத்துப் பெருவேந்தர்கள், முதலில் தொண்டை மண்டலத்தையும், பின்னர் சோழ மண்டலத்தையும், வேறுசில பகுதிகளை யும் தமது ஆளுகைக்கு உட்படச் செய்தனர். இது, தமிழகத்தின் தொன்மையான, நீண்ட கால வரலாற்றில் மிகப் பெரிய சாதனை என்றே கூற வேண்டும்.

இவர்கள் தோற்றுவித்த ஆட்சி அமைப்பு, நிர்வாக முறைகள் எல்லாம் அடுத்துவந்த பிற்காலச் சோழர், பாண்டிய, விசய நகரப் பேரரசுகளுக்கு அடிப்படையாய் அமைந்து, பயன் விளைத்தன.

அதனால்தான், அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த பொழுதும், அவற்றால் நாட்டு மக்களுக்குப் பெரு வாரியான பாதிப்புகள் ஏற்படவில்லை.

இத் தமிழகம் என்றுமே கண்டிராத ஒருமித்த ஆட்சிமுறை ஒன்றை, இங்கு அறிமுகப்படுத்திய இப் பேரரசர்களின் மரபினரை ஓரளவாவது அறிந்து கொள்ளுதல் பயன்தரும்!

ஆதலின், அதைச் சுருக்கமாகக் காண்போம்.







பல்லவர்தம் பட்டியல்

பல்லவர்களுக்குத் தலைநகராக விளங்கிய பெருமை காஞ்சிபுரத்துக்கே உண்டு.

இவர்கள் தொண்டை மண்டலத்தையும் அதனைச் சார்ந்த நாடுகளையும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை, அறுநூறு ஆண்டுகள் ஆட்சி செலுத்தியுள்ளனர்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டின் இடைப் பகுதிவரை ஆண்ட பல்லவர்கள் பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்வதற்கு வழியில்லை.

ஆறாம் நூற்றாண்டின் இடையிலிருந்துதான் இவர்களின் வரலாற்றுக் காலம் தெளிவாகத் தொடங்குகிறது.

பல்லவர் காலத்தில் பிராகிருத மொழியும் சமஸ்கிருத மொழியும் அரசாங்கச் செல்வாக்குடன் போற்றப்பட்டன.

பல்லவர்களின் பட்டயங்களில் முதற்பகுதி, சமஸ்கிருதமாகவும் இரண்டாம்பகுதி, தமிழ்ப் பகுதியாகவும் வரையப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

நம் காலத்தில் ஆங்கிலம் பெற்றுள்ள அரசுமரியாதை இடத்தை, அக் காலத்தில் சமஸ்கிருதம் பெற்றிருந்தது. கூடவே அப்பொழுது தமிழ் மொழியும் போற்றப்பட்டது.

வான்புகழ் பராவிய இராசராசன் காலத்திய கல்வெட்டுக்கள் சிலவற்றிலுங்கூட முற்பகுதி சமஸ்கிருதமாகவும் பிற்பகுதி தமிழாகவும் வரையப்பட்டுள்ளது.

இதை விழுப்புரம் — புதுவை செல்லும் வழியிலிருக்கும் கண்டமங்கலம் எனும் ஊரிலுள்ள சிவன் கோயில் கல்வெட்டுக்களில் காணலாம்.

அரசர்களின் மெய்ப்புகழைச் சொல்லும்போது, தேவர்களின் மொழியாக மதிக்கப் பெற்ற சமஸ்கிருத மொழியில்தான் சொல்ல வேண்டும் என்ற நம்பிக்கை அக் காலத்தில் பரவி இருந்ததை இவ் வழக்கம் புலப்படுத்துகின்றது.

கி. பி. 556 முதல் 903 வரை
அரசாண்ட பல்லவர்கள்

சிம்ம விஷ்ணு	556 — 590
மகேந்திர வர்மன் I	590 — 630
நரசிம்ம வர்மன்	630 — 668
மகேந்திர வர்மன் II	668 — 670
பரமேசுவர வர்மன் I	670 — 700
நரசிம்ம வர்மன் II (ராஜசிம்மன்)	700 — 728
பரமேசுவர வர்மன் II	728 — 730
நந்தி வர்மன் II	730 — 795
தந்தி வர்மன்	796 — 847
நந்தி வர்மன் III	847 — 859
நிருபதுங்க வர்மன்	859 — 899
அபராஜிதன்	885 — 903

பல்லவர்களின் தெளிவான வரலாற்றுக் காலந் தொடங்கி மரபுவழிப் பட்டியல் மேற்கண்ட வரிசையிலேயே காணப் பெறுகின்றது.

இப் பட்டியலில் குறிக்கப் பெற்ற அரசர்களுக்கு முன்னோராகத் திகழ்ந்த வேறு சில அரசர்களும் பல்லவரின் வரலாற்றில் காணப் பெறுகின்றனர்.

அவர்களில் 'வீர கூர்ச்சன்' என்பவன், நாக அரசனின் மகளை மணந்து அரசாளும் பேறு பெற்றான்.

அவன் மகன் 'ஸ்கந்த சிஷ்யன்' என்பவன், காஞ்சிபுரத்திலிருந்த கடிகையைச்[1] சத்திய சேனனிடமிருந்து கைப்பற்றினான்.

'குமாரவிஷ்ணு' காஞ்சியைக் கைப்பற்றிஅதைப் பல்லவர்களுக்குத் தலை நகராக்கினான்.

அவன் மகன் 'புத்தவர்மன்' என்பவன் சோழர் படைக்கு வடவாக்கினி போலத் திகழ்ந்தான்.

இந்நான்கு அரசர்களையும் பற்றி வாயலூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது.[2]

1. கடிகை — உயர்கல்வியளிக்கும் பல்கலைக் கழகம் போன்றது.
2. Epigraphic Indica Vol. XVIII Page 45—52

சிம்மவிஷ்ணு 556—590.

சோழநாட்டை வெற்றி கொண்ட பெருமை இம் மன்னனையே சாரும். அன்றியும் களப்பிரர், மாளவர், பாண்டியர், சிங்களர், கேரளர் ஆகியோரை வென்று தன் கீர்த்தியை நிலை நிறுத்திய வேந்தன் இவனே.*

தமிழ்நாடு முழுமையையும் இவன் கைப்பற்றினானோ என்று எண்ணும்படியாக இவனைப் பட்டயங்கள் புகழ்ந்து பேசுகின்றன. பட்டயச் செய்திகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இவன் தன் பகைவர்களை அவ்வப்போது வென்று அடக்கினான் என்பது திண்ணம்.

பல்லவர் குலத்தின் ஆற்றலை வெளியாரும் உணரச் செய்தவன் இப் பெரு மகனே.

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்திலுள்ள கோரையாறு என்னும் ஊரிலும், வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம் நரசிங்கநல்லூர் என்னும் ஊரிலும் கிடைத்த நடுகற்களில்,

'சிங்கவிண்ண வருமர்'

என்று இம் மன்னன் குறிக்கப் பெற்றுள்ளான்.

இவன் 33 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியதாக அந் நடுகற்கள் புலப்படுத்துகின்றன.

இவற்றைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது[1].

சிம்ம விஷ்ணுவுக்குப் பிறகு இவன் தம்பி பீம வர்மன் அரியணையில் ஏறினான். பீம வர்மனின் மகன் புத்தவர்மன், தன் தந்தைக்குப் பிறகு நாடாளும் உரிமை பெற்றான்.

இந்த இளைய பரம்பரையினர், எப்போது எங்கே ஆண்டனர் என்பது விளங்கவில்லை. இச் செய்தியைக் காசாக் குடிப் பட்டயம் மட்டுமே உணர்த்துகிறது.†

---

*. S. I. I. Vol. II. Part III.

1. செங்கம் நடுகற்கள் (தமிழ்நாடு அரசு. தொ.பொ.து.வெ.—1972. தொ.எ. 30, 86.)

† பல்லவர் செப்பேடுகள் முப்பது தமிழ்வரலாற்றுக்கழகம் வெளியீடு. சென்னை 66 பக் : XII, XIII

மகேந்திரவர்மன் I 590—630

இவன் சிம்ம விஷ்ணுவின் மகன். பல்லவர்களில் பெருமை வாய்ந்த முதல் பேரரசன் மகேந்திர வர்மன்தான்.



புதுக்கோட்டையடுத்த சித்தன்னவாசல் குகைக் கோயில் மண்டபத் தூணில் உள்ள ஓவியம். மகேந்திர வர்மன் I

மயேந்திரன், மயீந்திரன், மகீந்தரன் என்றெல்லாம் இவன் அழைக்கப் பெறுகிறான்.

காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள புல்லலூரில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியோடு போரிட்டு, அவனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தவன் இவன்தான்.

இவன் ஆட்சிக்கு வந்த தொடக்கக் காலத்தில் உள் நாட்டுப் பூசல்கள் நிகழ்ந்த துண்டு.

இவன் திறமை மிக்க பேரரசன் என்பதை விட, தான் வளர்த்த அழகுக் கலைகளாலும் பெற்ற கலையறிவாலும் வரலாற்றில் உன்னத இடத்தைப் பெற்றுள்ளான் எனலாம்.

சமயப் பொறை யுடையவன். இசையில் வல்லவன்.

ஆதலால் 'சங்கீர்த்தன ஜாதி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன்.

ஓவியக் கலையில் தேர்ந்தவன். ஆதலால், 'சித்திரகாரப் புலி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன்.

'மத்தவிலாசம்' என்னும் நகைச் சுவை நாடகம் எழுதி இலக்கியத் துறையில் புதுமையைச் செய்தவன். ஆதலின், இவன் 'மத்தவிலாசன்' என்று போற்றப் பெற்றான்.



சிவிபுந்து
நில்விலோனையம்பு
வேந்துலவித்து
பசரம்பு
மலாயு
கடுந்தரம்பு
நயம்பு

முதலான தெலுங்குப் பெயர்களையும் இவன் உடையவன்†.

முதலாம் மகேந்திர வர்மன்,

மண்டகப்பட்டு
திருச்சிராப்பள்ளி
பல்லாவரம்
வல்லம்
மாமண்டூர்
தளவானூர்
சீயமங்கலம்
மகேந்திரவாடி

முதலான இடங்களில் குடைவரைக் கோயில்களைக் குடைந்து அழியாப் புகழ் பெற்றவன். எனவே, 'க்ஷேத்தரகாரி' என்று புகழப் பெற்றான்.

முதலில் சமணராக இருந்து பின்னர் சைவராக மாறிய திருநாவுக்கரசு சுவாமிகள் வாழ்ந்த காலம், இம் மன்னன் காலமே யாகும்.

சமணனாக இருந்த மகேந்திரனைச் சைவனாக மாற்றிய பெருமை திருநாவுக்கரசருக்கே உரியது.

†. மகேந்திரவர்மன் — கழக வெளியீடு. 1955.
—திரு. மயிலை சீனி. வேங்கடசாமி

சைவனாக மாறிய இவ் வேந்தன், பாடலிபுரத்திலே யிருந்த (திருப்பாதிரிப் புலியூர்) அமண் பள்ளியை இடித்து, அக் கற்களைக் கொண்டு, பண்ருட்டியடுத்த திருவதிகையிலே சிவபெருமானுக்கென்று 'குணதரவீச்சுரம்' அமைத்ததாக வரலாறு பேசுகிறது.

இவன் காலத்தவனாக இதுவரை 12 நடுகற்கள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. இவை யாவும் வட்டெழுத்தில் வரையப் பெற்றவை.

அவற்றுள் ஒன்று, இம் மன்னன் 39 ஆண்டுகள் ஆட்சி செய்ததைக் குறிப்பிடுகிறது. ஆதலின், இவன் கி.பி. 590இல் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டுமென்று அறிஞர் கருதுவர்.[1]

எனவே, இவன் ஆட்சிக் காலம் கி.பி. 590 முதல் 630 வரை என்று கொள்ளல் வேண்டும்.

இவனை, 600 முதல் 630 வரை அரசாண்டதாகப் பல்லவர்களின் வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. 600 என்பதை 590 என்று மாற்றிக் கொள்ள வேண்டும்.

1. செங்கம் நடுகற்கள். Dr.இரா. நாகசாமி

நரசிம்ம வர்மன் 1 (630—668.)

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்மப் பல்லவன் அரியணை ஏறினான்.

தந்தையைப் போலவே இவனும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியோடு போரிட்டு வென்றான். இப் போர்கள் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் ஆகிய இடங்களில் நடந்தன வென்று கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.[2]

குலோத்துங்க சோழனது அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான், வாதபி கொண்ட செய்தியைக் கூறியுள்ளார். திருத் தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தில்,

'மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித் தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்'

2. S. I. I. Vol. I. Pages 144—155. & Epi. Indica, XVII Pages 340—344.

என்று சேக்கிழார் தெரிவிக்கிறார்.[1] இதனால் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான சிறுத் தொண்டர் என்ற பரஞ்சேதியார், தானைத் தலை வராக விளங்கிமையும் படைத் தலைமைத் தாங்கி அவரே வாதாபியை வென்றார் என்பதும் தெளி வாகின்றது.

முதலாம் நரசிம்மவர்மனுக்கு இவ் வெற்றியால் 'வாதாபி கொண்டவன்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

நரசிம்ம வர்மன் தன் தந்தையைப் போன்றே கோயில்கள் சமைப்பதில் பேரூக்கங் கொண்டான். குகைக் கோயில்கள் அமைத்தான்.

சேலம் நாமக்கல் மலையடியில் இருக்கும் நரசிங்கப் பெருமாள் குகைக்கோயில் இம் மன்னன் எடுத்ததே.

திருச்சிரப்பள்ளி மலையடியில்
தென் மேற்கு மூலையில் உள்ள குகைக் கோயிலும்,

கிழக்குப் பக்கத்தில் சிவன்கோயில்,

மேற்குப் பக்கம் பெருமாள் கோயில்

இவற்றிற்கு இடையே உள்ள மண்டபச் சுவரில் சிவன், பிரமன், இந்திரன், துர்க்கை, கணபதி

1. பெரிய புராணம். செய்யுள் 6

—ஆகியோர் திருமேனிகள் மிகச் சிறப்பாகச் செதுக்கப் பெற்றுள்ளன.

கோயில் முன் மர வேலைப்பாடுகள் போன்று கற்றளியில் அமைத்துள்ள வேலைப்பாடு மிகவும் மதிக்கத் தக்கதாய் உள்ளது.

மகாபலிபுரத்தில் மகேந்திரன் தொடங்கி விட்ட வேலையை நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்தி அழியாப் புகழைப் பெற்றான். இப் புகழும் வாதாபி வெற்றியால் கிடைத்ததே ஆகும்.

மாமல்லையில்

குகைக் கோயில்கள்

தேர்கள்

கற்சிலைகள்

மகிஷாசுர மண்டபம்

வராக மண்டபம்

திரிமூர்த்தி மண்டபம்

ஆகியனவும் முதலாம் நரசிம்மவர்மனால் தோற்று விக்கப் பெற்றனவே![1]

1. *பல்லவர் வரலாறு*
— டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

இவனுக்கு,

மகா மல்லன்

ஸ்ரீபரன்

ஸ்ரீமேகன்

ஸ்ரீநிதி

இரணசயன்

அத்தியந்த காமன்

அமேயமாயன்

நய நாங்குரன்

என்பன வாகிய சிறப்புப் பெயர்கள் வழங்கி யதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

பரமேசுவர வர்மன் (670—700)

இவன் நரசிம்மவர்மன் மகன். இவன் வெளி யிட பட்டயத்தில், பிற மன்னர் துணையின்றி, எணைற்ற வீரர்களைப் பெற்றிருந்த விக்கிர மாத்தனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் என்று தெரிகிறது.

உதயேந்திரப் பட்டயமும் வேலூர்ப்பாளையப் பட்டயமும் இதனைச் சிறப்பித்துக் கூறுகின்றன‡.

இவன் சிறந்த சிவபக்தன். கூரம் என்ற சிற்றூரில் சிவன்கோயில் ஒன்றைக் கற்றளியாகக் கட்டினான். இதற்குப் 'பரமேசுவரமங்கலம்' என்று தன் பெயரால் அமைந்த சிற்றூரை நிவந்தமாக அளித்தான்.

அக் கோயிலுக்கு,

'வித்ய ா விநீதபல்லவ பரமேசுவர க்ருகம்' என்ற பெயரைச் சுட்டினான். இக் கோயிலே தமிழகத்தின் முதற் கற்றளியாகும்.†

இவனுக்குச்

சித்ரமாயன்

குணபாசனன்

அத்யந்த காமன்

ஸ்வஸ்தன்

ஸ்ரீநிதி

ஸ்ரீபரன்

ரண சயன்

தருணாங்குரன்

காமராகன்

முதலிய விருதுப் பெயர்கள் இருந்துள்ளன.

‡. S I. I. Vol. I Pa. 154.

† History of the Pallavas pas. 15. c. Srinivа Sachari's

நரசிம்மன் II. (700- 728)

காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு அரசோச்சிய பல்லவ வேந்தர்களில் இராசசிம்மன் என்ற இயற் பெயருடையவன்,

இரண்டாம் நரசிம்மவர்மன்

என்னும் பட்டம் புனைந்து, பல்லவ நாட்டுப் பேரரசனாக விளங்கினான்.

இவன் ஆற்றல் மிக்கவன்.

போர்களில் காணப்பெற்ற அரும் பெருந் தன்மை உடையவன்.

மதமிக்க போர் யானைகள் நிகர்த்த பகைவர்களை அஞ்சுவித்துக் கொன்ற சிங்கம் போன்றவன்.

எங்கும் பரந்த கீர்த்தியுடையவன். பகைவர் கூட்டங்களை அழிப்பவன்.

பக்தியினால் தூய்மையுற்ற இவனுடைய உள்ளத்தில் சிவபெருமான் எப்பொழுதும் நிலை பெற்றிருக்கிறார்[1]

இவ்வாறு, பனைமலை தாளகிரீஸ்வரர்க் கோயிற் கல்வெட்டு இவனைப் புகழ்ந்து பேசுகிறது.

1. —3 S. I. I.

பனைமலை துர்க்கைக் கோயிற் கல்வெட்டு இவனை புகழ்வதைக் காண்போம்!

போரில் வெற்றியுடையவன்.
மங்களகரமான ஆற்றல் மிக்க அழகிய வில்லை உடையவன்.
நிகரற்ற வீரன்.
அரசாகிய செல்வியினால் காப்பாற்றப் பெறுபவன்.
சிவனின் திருவடியை மௌலியாகப் புனைந்து கொண்ட பெரியோன்*.

இவன் பனைமலைக் கோயிலைமட்டும் எழுப் பினான் அல்லன். காஞ்சி கயிலாச நாதர் கோயில் எனப் பெறும் இராசசிம்மேச்வரத்தை எடுப்பித்த வனும் இவனே!

மல்லையில் கடற்கரைக் கோயிலையுப் உருவாக்கினான்.

தரைவழி, மலைவழி, கடல்வழி ஆகிய மூவிடங்களிலும் கலைக் கோயில்கள் அமைத்த அழகு வண்ணத்தைக் கண்டான்.

இராச சிம்மேச்சுரத்தில் இருநூற்று ஐம்பது கும் மேற்பட்ட இவனுடைய விருதுப் பெயர்கள அங்குள்ள கல்வெட்டுக்களால் அறியலாம்‡.

*. S. I. I. 31
‡. S. I. I. Vol. I No 24, Page-12.

அபராஜிதன்

அதிரண சண்டன்

சங்க்ராம ராமன்

சங்கரபக்தன்

பரம பாகவதன்

ஸ்ரீபதி வல்லபன்

கால காலன்

ஸ்ரீவாத்ய வித்யாதரன்

ரிஷபலாஞ்சனன்

ஸ்ரீ ஆகமப் பிரியன்

என்பவை இவனுடையவிருதுகளில் சிலவாகும்.

இவன் சிவபெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டவன். ஆதலின், சிவ சூடாமணி என்னும் பெயர் புனைந்து கொள்வதில் பெருமையுற்றான்.

சைவ சித்தாந்தத்துப் பேரறிவு பெற்றவன். நடனப் பிரியன்.

பரமேசுவரன் இராசசிம்மனாக அவதரித்தான்.

ஆயினும், இவன் பிற மதத்தை வெறுத்தானல்லன். அம் மதத்துக்கு வேண்டியதைக் கொடுத்து உறுதுணையாக இருந்தான். அதனால், இவன் பரமபாகவதன் எனப் பெயர் பெற்றான்.

'வலிமையிலும் புகழிலும் நரசிம்ம அவதாரத்தை ஒத்தவன்'

என்றெல்லாம் புகழப் பெற்றான்.

களந்தை என்னும் ஊரை ஆண்டு வந்த களப்பிர மன்னனான காலன் என்பானைக் கொன்ற காரணத்தால், இவன் 'கால காலன்' என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.

'துன்னார் முனைகள்
தோள்வலியால் வென்று
சூலப்படையார் தம்
நன்னா மந்தந்
திருநாவில் நாளும்
நவிலும் நலமிக்கார்
பன்னாள் ஈசர்
அடியார்தம் பாதம்
பரவிப் பணிந்தேத்தி
முன்னா கியநல்
திருத் தொண்டின்
முயன்றார் களந்தை முதல்வனார்.'

என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் 'முதல் வனே' இராசசிம்மன் வென்ற களப்பிர மன்னன் காலன் என்பர்.

சிவநெறிச் செல்வரும் களந்தை முதல்வரு மாகிய இச் சிவனடியார், காலன் என்னும் பெய ருடையார் என்று கூறுதற்கோ, களப்பிர மன்னன் என்று கருதுதற்கோ சான்றேதும் இல்லை.

இராச சிம்மன் வென்ற காலனுக்கும்
களந்தை முதல்வனுக்கும் யாதொரு
தெடர்புமில்லை.

இம் மன்னன் பெருந்தகை, மாமல்லபுரம் கடற் கரையில் உள்ள கோயில்களில்,

க்ஷத்திரிய சிகாமணி பல்லவனேச்சுரம்

இராச சிம்ம பல்லனேச்சுரம்

பள்ளி கொண்டருளிய பல்லவனேச்சுரம்

ஆகிய முப் பெருங் கோயில்களையும் எடுப்பித் தான். இவற்றுள் முன்னிரண்டு கோயில்கள் அழிந்துவிட்டன. எஞ்சியுள்ளது பெருமாள் கோயில் மட்டுமே.

அழிந்து போன கோயிலில் காணப் பெறும் கல் வெட்டுக்களும் இராச சிம்மனின் பல்வேறு விருதுப் பெயர்களைக் கூறுகின்றன.



எழிலார்ந்த எழுத்துக்கள்

பல்லவக் கிரந்தத்தினால் அமைந்த வடமொழிக் கல் வெட்டுக்கள் இவன் காலத்தியவை.

இராசசிம்மன், கல் லெழுத்துக்களில் கூடக் கவனம் செலுத்தினான். எழுத்துக்களைப் பல்வேறு வடிவங்களால் எழுதினான்.

இவன் எடுப்பித்த கோயில்களில் கல் வெட்டுக் களைக் காணும்போது, ஓவியங்களோ என்று ஐயுறத் தோன்றும்.

மேற்போக்காகக் காணும்போது, அவற்றை எழுத்துக்கள் என்று அடையாளம் காண்பதே அரி தாகிவிடும்.

எழுத்துக்கள் சில தோகை விரித்து நடனஞ் செய்யும் மயில்களாகக் காட்சி தரும்.

வேறுசில, நடைபயிலும் அன்னங்களோ என்று எண்ணிடச் செய்யும்.

இன்னும் சில, செடி கொடிகளாகப் பின்னிப் பிணைந் திருக்கும்.

அவற்றின் இடையிடையே மெல்ல வளைந்து ஊர்ந்து செல்லும் பாம்புகளாகச் சில எழுத் துக்கள்!

இப்படி எழுத்துக்களையே சித்திரமாக மாற்றிய பேரரசர் வேறு யாரும் இலர்.

முதலாம் இராசராச சோழன், தான் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், அழகிய எழுத்துக்களால் கல் வெட்டுக்களை அமைத்தான் என்பர். ஆனால், இராசசிம்மனின் கல் வெட்டு எழுத்துக்கள் மிகவும் கவினுறு எழுத்தாகும்.

பல்லவர்கள் தொடர்பு கொண்டிருந்த ஜாவா, சுமத்திரா, கம்போடியா போன்ற கீழை நாட்டு மொழிகள் கூட, பல்லவக் கிரந்தத்தின் சாயலில் தென்படுகின்றன என்பர்[1].

இவற்றை யெல்லாம் அறியும் பொழுது நமக் குப் பல்லவர் மீது பெருமிதம் தோன்றுகிறது.

புலவர் தண்டி, தனது நூலான 'காவியா தரிசத்தில் குறிப்பிடும் 'இராஜ வர்மன்' என்னும் பல்லவன், இந்த இராஜ சிம்மனே ஆவான். இவனைப் பற்றியும் காஞ்சியைப் பற்றியும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது.

புலவர் தண்டி, காஞ்சிப் பல்லவர் குலத்து அரசியல் குருவாய், வித்தை பலவற்றைப் பயிற்று விப்பவராக இருந்துள்ளார்.

---

1. 'கல்வெட்டியல்'—பக்.31

தண்டியின் மாணாக்கனாக இராஜசிம்மன் இருக்கலாம் என்பது ஏ. அரங்கசுவாமி சரஸ்வதி அவர்களின் கருத்து.[1]

பல்லவர் சளுக்கியருடன் நடைபெற்ற போர்க் காலங்களில், காஞ்சி மக்கள் அடைந்த இன்னல் களை 'அவந்தி சுந்தரி கதா' எனும் நூல் விவரிக் கிறது. ஓலைச் சுவடியாகக் கிடைத்த இக் காவியத் தைப் புலவர் தண்டி விரிவாக எழுதியுள்ளார்.

இம் மன்னன் கட்டிய கோயில்கள் ஏறத்தாழ ஒரே அமைப்புடன் திகழ்கின்றன.

அவை,

பனைமலை மலைக் கோயில்

காஞ்சி கயிலாசநாதர் கோயில்

மாமல்லை கடற்கரைக் கோயில்

திருத் தணிகை சிவன் கோயில்

காஞ்சியில் ஐராவதேஸ்வரர் கோயில்

காஞ்சியில் அமரேஸ்வரம் கோயில்

என்பன ஆகும்.

1. The Age of Baravi & Dandin Q. J. M. S Vol. XIII P.P. 674—679.

புதிதாகக் கண்ட கல்வெட்டு

19. 7. 1988 இல் காஞ்சிபுரம் மங்களேஸ் வரர் தீர்த்தக் கரையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்லவர் காலக் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

காஞ்சி காமகோடி மடத்திற்கு எதிரில் உள்ள இந்த மங்களத் தீர்த்தம், தூர்ந்து மிகவும் அவல நிலையில் இருந்தது.

பரமாச்சார்ய சுவாமிகளின் விருப்பத்தை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை பல இலட்சம் ரூபாய் செலவில் இக் குளத்தைச் சீர் செய்தது. படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டு இப்போது இக் குளத்தில் நீர் சுரந்து தேங்கியுள்ளது.

இதன் கரையில், அண்மையில் (ஜூலை 1988) பரமாச்சார்யாரின் முன்னிலையில், மங்களேஸ் வரர் என்ற கோயில் சீரமைக்கப் பெற்றுக், குட முழுக்கும் நடைபெற்றது.

அக் குளத்தில் நீராடச் சென்ற சுவாமிகள், படிக்கட்டில் சில கல் வெட்டுகள் அமைந்து இருப் பதைக் கண்டு, அதைப் படி எடுத்துப் படிக்க விருப்பம் தெரிவித்தார். அவரது விருப்பப்படி தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள், இக் கல்வெட்டைப் படி எடுத்து வந்தார்.

அக் கல்வெட்டு, கி.பி. 700 இல் ஆண்ட பல்லவ அரசன் இராஜசிம்மனுடைய கல்வெட்டின் தொடக்கமாக இருப்பது கண்டறியப்பட்டது.

இதே கல்வெட்டின் முழுவாசகம் மகாபலிபுரத்தில் கணேச ரதம் என்ற ஒற்றைக் கற்கோயிலிலும், தர்மராஜ மண்டபம் என்கின்ற கற் கோயிலிலும் இருக்கிறது.

இக் கல்வெட்டுக்களைத் தோற்றுவித்த அரசனே காஞ்சிசங்கராச்சார்யா மடத்திற்கு அருகில் ஒரு சிவாலயம் எடுப்பித்திருக்கிறான்.

இதைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உடைந்து பகுதிகளாக இப்பொழுது குளத்துப் படியில் காணக் கிடைக்கின்றன.

இம் மன்னன் காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய கயிலாய நாதர் ஆலயத்தினைத் தோற்றுவித்திருக்கிறான். இது தவிர மற்றும்ஒரு சிவாலயத்தையும் தோற்றுவித்து, அதில் கல்வெட்டைப் பொறித்து வைத்திருக்கிறான் என்று தெரிய வருகிறது.

கி.பி. 700 இல் காஞ்சிபுரத்தில் கட்டப் பெற்ற மற்றொரு பல்லவர் கோயிலாக இது இருந்திருக்கிறது என்பதை இக் கல்வெட்டுக் கூறுகிறது. கல்வெட்டில் வட மொழியில், பல்லவ கிரந்த எழுத்தில் சிவபெருமானின் சிறப்புக் கூறப் பெற்றுள்ளது.[1]

1. 'தினமணி' — 20. 7. 1988

சுமார் கி.பி. 720 ஆவது ஆண்டில் இவனது அரசு உயர்ந்து விளங்கியது. அராபியர், திபேத்தியர் மீது வெற்றி காண்பதற்குச் சீன மன்னர்கள் இவனுடைய உதவியை நாடியுள்ளனர். இதிலிருந்து இவன் உலகளாவிய உயர்ந்த ஒரு பேரரசன் என்பதை அறியலாம்.

தென்னிந்திய அரசனான நரசிம்மன், சீனாவுக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினான். அவன் தனது விருப்பத்தின்படி தூதுக் குழுவை அனுப்பினான். காலாட் படையையும் யானைப் படையையும் அனுப்புவதாக அவன் தூது அனுப்பினான்.

இச் செய்தி கி.பி. 1013 இல் தொகுக்கப்பட்ட சீனாவின் கலைக் களஞ்சியத்தில் குறிக்கப் பட்டுள்ளது.

சீன மன்னன் வேண்டுகோள்படி பல்லவன் அனுப்பிய படைக்குப் 'புனிதப் படை' என்று பெயரிட்டு அழைத்தான்.

'தென்னிந்தியப் பேரரசின் அரசன்'

என்று நரசிம்மனுக்குப் பட்டம் வழங்கப் பெற்றது. இப் பட்டம் சீனத் தூதுக் குழுவினால் சூட்டப் பெற்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத் தொண்டத் தொகையில் கழற்சிங்கன் என்று குறிப்பது இவ் வேந்தனுக்கே பொருந்துகிறது.

பிற்காலப் பல்லவனான மூன்றாம் நந்திவர்மன் என்பதைவிட இவனுக்கே கழற்சிங்கன் என்பது அதிகம் பொருந்துகிறது.

பல்லவர் நாட்டுக்கும் கடல்கடந்த நாட்டுக்கும் பல்லவர் காலத்தில் நிலவிய அரசியல் வணிகத் தொடர்புகள், பிற்காலப் பல்லவனான நிருபதுங்கவர்மன் காலம் வரை இருந்தது. இந்தத் தொடர்பு எவ்வாறு இருந்தது என்பதை இக் காலத்தில் அறிய இயலவில்லை.

பனைமலையில் புதிதாகக் கண்டு பிடித்த கல்வெட்டுக்கள்

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070—1122) காலத்திய இரண்டு கல்வெட்டுக்கள் இங்குள்ளன. அவற்றைப் புதிதாக நாங்கள் கண்டு, படி யெடுத்தோம். அவை இன்றியமையாதன. ஒன்றின் வாயிலாக, இவ்வூர் 'இராசராச சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சிற்றூராக விளங்கியதை அறிகிறோம்.

மற்றொன்று, குன்றின்மீதுள்ள சிவன்கோயில் இறைவன், சோழர் காலத்தில் 'குன்றுடைய மகா தேவர்' என்ற பெயருடன் விளங்கியதை அறிவிக்கிறது.[1]

1. புதிய கல்வெட்டு எண். 1.

பிற்காலக் கல்வெட்டுக்கள்

கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களும் ஆர்க்காட்டு நவாபான சதாதுல்லாகானின் கல்வெட்டும் இம் மலைக் கோயிலில் கிடைத்துள்ளன. அக் கல்வெட்டுக்களில் ஒன்றில், இச் சிற்றூரின் பெயர் 'பனசை நகர்' என்று குறிக்கப் பெறுகிறது.

சோழர் காலத்தில்

'குன்றுடைய மகா தேவர்'

என்று அழைக்கப் பெற்ற இறைவன்,

இடைக் காலத்தில்

தனிர்மலை ஈசன்

என்றும்,

பிற்காலத்தில் தாளகிரீசுவரர்

என்றும் அழைக்கப் பெற்றுள்ளார்.

தேசிங்கு மன்னனோடு போர் செய்து வென்ற, ஆர்க்காட்டு நவாபான சதாதுல்லாகானின் கல்வெட்டில், மெய்க் கீர்த்தி காணப் பெறுகிறது. அது முழுக்க முழுக்க விசயநகர வேந்தர்களின் மெய்க் கீர்த்தி போலவே, அமைந்திருக்கிறது. அதுவும் ஆராயத் தக்க தொன்று.

அராபிய மரபைச் சேர்ந்த இவனுடைய உண்மையான பெயர் முகம்மதுசயீது என்பதாகும்.

ஔரங்கசீப் காலத்தில் மொகலாயப் பேரரசின் தக்காணத்துத் திவானாக விளங்கினான் இவன். தன்னைத் தமிழகத்து மண்ணின் மைந்தனைப் போலக் காட்டிக் கொள்ள இவன் முற்பட்டுள்ளான். இதனை இவன் காலத்துக் கல்வெட்டால் நன்கு அறியலாம்.*

பெருமான் கோயில் கல்வெட்டு

பனைமலை ஊரின் மேற்கில் இன்று அமைந் துள்ளது சென்ன கேசவப் பெருமாள் கோயில். இக் கோயிலிலும் கல்வெட்டுக்கள் காணப் பெறுகின்றன.

பிற்காலத்தில் கோயில் கட்டடம் கட்டியபோது சிவன் கோயிலில் இருந்த கற்களை எடுத்து வந்து பெருமாள் கோயிலில் அமைத்துள்ளனர். அதனால் கல்வெட்டுச் செய்திகள், தொடர்ச்சி கிடைக்காமல், விடுபட்டுக் காணப்படுகிற்து. இதனால் பல புதிய செய்திகளை அறியஇயலாமற் போய்விட்டது.

பனைமலையிலுள்ளசென்ன கேசவப் பெருமாள் கோயில் கல்வெட்டுக்களில், சிவன்கோயில் பற்றிய செய்திகளே இருக்கின்றன. எனவே, இக் கோயிலில் அமைந்துள்ள கற்கள், இன்று இடிந்து போயுள்ள பழைமையான 'விடை உடையார்' என்னும் சிவன் கோயில் கட்டடத்துக் கற்களே என்பது உறுதி.

*முன் பதிப்பு A.R.E. 617 of 1916

விடை உடையார்
திருவலஞ்சுழி உடைய நாயனார்

என்னும் பெயருடன் விளங்கிய சிவபெரு மானுக்கு, இவ் வூரில் தனியாக வேறொரு சிவன் கோயில் இருந்திருக்கிறது. அது தற்பொழுது உடையார் கோயில் என்னும் பெயருடன் குறிப்பிடப்பெறுகிறது. ஊருக்குக் கிழக்குப் புறத்தே பழுதுற்றிருக்கும் கோயிலாக அது இருக்கிறது.

இச் சிவன் கோயிலுக்குச் சொந்தமாக நந்த வனங்கள் இருந்தன. அவற்றுடன் இவ்வூரில் மடம் ஒன்றும் இருந்துள்ளது. அம் மடத்துக்குச் சொந்த மாக இருந்த நிலம், 'மடப்புறம்' என்று அழைக்கப் பெற்றுள்ளது.[1]

சிவன் கோயில் பற்றிய இச் செய்திகளை, இப்பொழுதுள்ள பெருமாள் கோயிலில் தென்புறக் குமுதப்படையில் காண்கிறோம்.

'பூவங்குண்டில்'

என்னும் பெயருடைய நிலமும்,

'புலி இருந்த எல்லை'

என்னும் ஓர் இடமும் கல் வெட்டுக்களில் காணப் பெறுகின்றன.

ஆதலின், ஒரு குறிப்பிட்ட காலத்தில், இவ்வூர் எல்லையில் சிறுத்தைப் புலிகள் மிகுதியாக இருந் திருக்க வேண்டும்.

1. கல்வெட்டு எண். 8.

பனைமலைப் பேட்டை நடுகல்

நீண்ட கூரிய வேலொன்றைத் தம் இருகைகளாலும் உறுதியாகப் பற்றிய வண்ணம், பாய்ந்து தாக்குவது போன்ற வீரனின் உருவம், நடுகல்லில் காணப்படுகிறது. வீரனின் உருவம் அழகுற வடிக்கப் பெற்றுள்ளது. இந்த நடுகல், பனை மலையைச் சார்ந்துள்ள பேட்டை எனும் ஊரின் நடுவிடத்தே, பெருவழிச் சாலையில் நடப் பட்டுள்ளது.

அது அக் காலத்தில் இவ் வூர் எல்லையில் புலியோடு போராடி மாண்ட வீரன் ஒருவனின் நினைவாக அமைக்கப் பெற்ற நடுகல்லாக இருத்தல் வேண்டும்.

பரமேசுவர வர்மன் II (728—730)

இவன் இராசசிம்மன்மகன். பெயர் இரண்டாம் பரமேசுவர வர்மன். இவனது மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்று, பண்ணுருட்டியடுத்த திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலில் காணப் பெறுகிறது.

காசாக்குடிப் பட்டயம்,

'இவன் கலியை வென்றான்.

அமைதியான வாழ்க்கையை நடத்தினான்.

பிரகஸ்பதி விதித்த வழியில் குடிகளை நடத்தினான்.

உலகத்தைக் காத்தான்'

என்று புகழ்ந்து கூறுகிறது.*

வேலூர்ப் பாளையப் பட்டயம்,

இவன் கலியை வென்றான்.

மநு நீதிப்படி நாட்டை ஆட்சி செய்தான்

என்று போற்றிக் கூறுகிறது.



* S.I. I. Vol. II Page 357

புதிய மரபு

இரண்டாம் பரமேசுவர வர்மனுடன் சிம்ம விஷ்ணுவின் பல்லவ மரபு முடிந்து விடுகிறது.

சிம்ம விஷ்ணுவின் தம்பி பீம வர்மன் என்பானாவான்.

பீமவர்மன் மரபில் வந்தவன் இரண்யவர்மன்.

இரண்யவர்மன் மகன் பல்லவ மல்லனாகிய இரண்டாம் நந்திவர்மன் ஆவான்.

இரண்டாம் பரமேஸ்வர வர்மன் போரில் இறந்தான். அச்சமயம் வடக்கிலிருந்து சாளுக்கியர் எந்த நேரத்திலும் படையெடுக்கலாம் என்ற நிலை இருந்தது.

தெற்கே, பாண்டியர் நாட்டைக் கவரும் வேட்கையில் முனைந்திருந்தனர்.

பல்லவ நாட்டில் பொறுப்புள்ளவர்களின் உள்ளத்தைக் கவலை கவ்வியது.

இரு பேரரசர்களை எதிர்க்கும் ஆற்றல் பெற்ற ஒருவனைத் தேடினர். பல்லவப் பேரரசுக்கு இரண்யவர்மனை வேந்தனாக்க முனைந்தனர்.

ஆனால், அவன் மறுத்துவிட்டான். அவன் மகன் பல்லவ மல்லன், 'நான் அரசனாகின்றேன்' என்று கூறினான்.

இரண்டாம் நந்திவர்மன் என்னும் பெயருடைய அவன், தன் இளமையையும் கருதாமல், பொறுப்புணர்ச்சியோடு ஆட்சி யுரிமையை ஏற்றுக் கொள்ள முன்வந்தான்.

சான்றோர்களாலும் கடமை உணர்ந்த குடிமக்களாலும் அவன் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றான்.[1]



1. பல்லவர் வரலாறு
— டாக்டர் மா.இராசமாணிக்கனார்.

வரலாற்றில் வாழும் உண்மையாளர்

பல்லவ நாட்டின் அரச பதவி இரண்டாம் நந்தி வர்மனைத் தேடி வந்தது போல, சோழப் பேரரசில் அரச பதவி ஒருவனைத் தேடிப் பிடித்தது. அவனே இராசாதிராசன். இவ் வுண்மையாளனைப் பல்லவ ராயன் பேட்டைச் சாசனத்தால் அறியலாம்.

இதோ அவன் வாய் மொழியைக் கேட்போம்!

'நான் சோழ அரியணைக்கு நேர் உரிமை யுடையவன் அல்லன்; இராச ராசனின் மக்களே உரிமையாளர்கள்.

நான், நாடாள விரும்பவில்லை; அது வாகவே என்னைத் தேடி வந்தது. பேரரசு நடத்திச் செல்லும் தகுதி அப்போதில்லாத காரணத்தால் அரச பதவியை ஏற்றேன்.

அரசு போகத்தினால் பதவியை ஏற்க வில்லை. அக்காலத்துப் பாண்டிய நாட்டில் பங்காளிகள் அரியணைக்காக, நீயா, நானா? என்று வாரிசுப் போர் நிகழ்த்து கின்றனர்.

ஈழத்து மன்னனை உள்ளே விட்டு, தமிழரே தமிழரை அடித்துப் போரிட்டு மடியுங் காலத்தில் சந்தர்ப்பத்தால் உரிமை பெற்றேன்.

அரியணைக்கு உரிமை யுடையோர் மன்னனின் பிள்ளைகளே.'

இந்த இரகசியத்தை எப்போது சொல்கிறான்? தன்னை அரசனாக்கிய அறிவுடைப் பெருமான் நம்பிப்பல்லவரையன் மறைந்த பிறகு, 'தன்னைத் தட்டிக் கேட்கத் தக்கவர் ஒருவருமில்லை' என்ற நிலையிலும் அவன் இவ்வாறு கூறினான்.

கூறியதோடு மட்டுமல்ல; நம்பிப்பல்லவரையன் அமைத்த கோயிலிலே தம் குல நாயகரான சிவ னாரின் உண்ணாழி விதானத்தின் கீழ், அருமை யான கல்வெட்டாகவும் வெட்டுவித்தான்.[1]

இது போன்ற உண்மையாளர்களையும் வரலாற்றில் காண முடிகிறது.



1. 'அருளுடைச் சோழ மண்டலம்'
குடந்தை திரு. ந. சேதுராமன்.

இரண்டாம் நந்திவர்மன் (730 - 795)

இவன், 65 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். சான்றாக, இவனது 65 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கிடைத்ததை வைத்தே அம் முடிவுக்கு வந்தனர்.

பன்னிரண்டு வயதில் பட்டத்திற்கு வந்தமை யால் இவ்வளவு காலம் அரசோச்சினான் போலும்!

நந்திவர்மப் பல்லவனுக்கு உதய சந்திரன் என்னும் சிறந்த படைத் தலைவன் ஒருவன் இருந் தான். அவன் ஆற்றிய போர்கள் பல. பல்லவ மல்லன் பல ஆண்டுகள் ஆட்சி புரிந்தமைக்கு மற்றொரு காரணம், உதய சந்திரனே ஆவான்.

வரலாற்று வாயில்கள்

பல்லவர் பட்டயங்கள்

பாண்டியர் பட்டயங்கள்

சளுக்கியர் பட்டயங்கள்

காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டுக்கள்

கங்கர் கல்வெட்டுக்கள்

இராட்டிரகூடர் பட்டயங்கள்

காசாக்குடிப் பட்டயம்

மகாபலிபுரக் கல்வெட்டுக்கள்

வேள்விக்குடிப் பட்டயம்

சின்னமனூர் பட்டயம்

—இவை அனைத்தும் பல்லவப் பேரரசைப் பற்றி விளக்குவனவாம்.

சமயப் பொது நோக்கு

இரண்டாம் நந்திவர்மன் (பல்லவ மல்லன்), சமயப் பொது நோக்குக் கொண்டவனாகத் திகழ்ந் துள்ளான். ஆனால், சிறந்த வைணவனாக இருந் திருக்கிறான்.

காசாக்குடிப் பட்டயம் 'அரிசரணபரன்' என்று இவனைச் சிறப்பிக்கின்றது.

இவன் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலுக் குப் பல்லாற்றானும் தொண்டு செய்திருக்கிறான்.

கூரம் என்னும் ஊரிலுள்ள கேசவப் பெருமாள் கோயில், இவனால் சிறப்புற்றது.

இவன் காலத்தில் (பண்ணுருட்டி) திருவதிகை வீரட்டானேச்சுரர் நலம் பல பெற்றார்.

புதுக் கோட்டை குன்றாண்டார்க் கோயில் மேன்மை எய்தியது.

காஞ்சி முத்தீச்சுரர் கோயில் பெருமையுற்றது.

ஆர்க்காட்டிற்கு அருகில் இருக்கும் பஞ்ச பாண்டவர் மலையில், சமணர்க்குக் குகையொன்று இவன் அமைத்தான்.

அங்கிருக்கும் கல்வெட்டு வாசகம்:

'நந்தி போத்தரையர்க்கு ஐம்பதாம் ஆண்டு நாகநந்தி குரவர் வழிபடப் பொன் இயக்கியார்க்குப் படிமம் எடுக்கப் பெற்றது.'

இம் மன்னன் காலத்தில் புத்த மதத்தவரும் வாழ்ந்தனர் என்பதைத் திருமங்கை ஆழ்வாரின் பதிகங்கள் மெய்ப்பிக்கின்றன.

பல்லவ மல்லன் சிறந்த கல்விமான். இவனை காசாக் குடி எனும் ஊரில் கிடைத்த பட்டயம்,

இருள் அகற்றும் ஒளி அனையர்

என்று கூறிச் சிறப்பிக்கின்றது.

படைக்கலப் புலவன்

இசை நேசன்

செய்யுட்கள் இயற்றுவதில் வால்மீகி போன்றவன்

வில்வித்தையில் இராமன்

அரசியலில் பிரகஸ்பதி

என்று பலவாறு பட்டயங்கள் இவனைச் சிறப்பிக்கின்றன.

வில்லியனூர் புலவர் ந. வெங்கடேசன்

தந்தி வர்மன் (கி. பி. 796—847)

இவன் நந்திவர்மனின் மகன். பாட்டனாரின் பெயராகிய 'வைரமேகன்' என்னும் பெயரும் இவன் புனைந்திருந்தான். இவனுடைய கல்வெட்டுக்கள் திருச்சிராப்பள்ளியி லிருந்து வடக்கே திருச்சானூர் வரை பரவி யிருந்ததாக வரலாற்றாய்வாளர் கருதுவர்.

நீர்வளம் நிலவச் செய்தோன்

இவன் திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் 'மாற்பிடுகு ஏரி' ஒன்றை வெட்டினான். புதுக் கோட்டையில் 'வாலி ஏரி' யைச் சிற்றரசன் வாலி வடுகன் கலிமூர்க்க இள அரையனால் வெட்டு வித்தான்.

திருவெள்ளறையில் கன்பன் அரையன் என்ப வனால் 'மாற்பிடுகு பெருங்கிணறு' வெட்டு வித்தான்.

திருச்சிராப்பள்ளிக்கு அடுத்த உய்யக் கொண் டான் திருமலைக் கல்வெட்டு, அண்மையிலுள்ள கால்வாய் 'வைரமேகன் வாய்க்கால்' என்ற பெயரால் குறிக்கப் பெறுகிறது. இது தந்திவர்மன் காலத்தில் வெட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

திருவிப்பிரம்பேட்டு ஏரி அகழ்ந் தெடுக்கப் பெற்றதும் தெரிகிறது.

இவன் காலத்துச் செல்வர் பலர், கேணியும் ஊருணியும் எடுத்துள்ளனர். ஏரிகளைத் தூய்மைப் படுத்தினர்.

இவற்றை இவன் காலத்துக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். இது சிறந்த மனிதப் பண்பை எடுத்துக் காட்டுகிறது.

திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள ஆலப் பாக்கத்திற்குத் 'தந்திவர்ம மங்கலம்' என்று இம் மன்னன் பெயரிட்டான்.

இவன், காஞ்சி பரமேச்சுர விண்ணகரத்திற்குப் பொற்குடம் ஒன்றை அளித்தான்.[1]

1. S.I.I. Vol. IV No. 34

நந்தி வர்மன் III (கி. பி. 847—869)

இவன் தந்திவர்மன் மகன். இம் மன்னனைப் பற்றிக் கூறுவதில் வேலூர்ப் பாளையப் பட்டயமே சிறந்தாக விளங்குகிறது.

பொன்னேரிக் கூற்றத்துத் திருக்காட்டுப் பள்ளியில் உள்ள சிவன் கோயிலுக்கு ஒரு சிற்றூரைத் தேவதானமாக இவன் அளித்துள்ளான்.

தெள்ளாறு வெற்றியைத் தில்லை ஸ்தானம் கல்வெட்டுக் கூறுகிறது.

செந்தலை, திருவல்லம், கோவிலடிக்கருகில் திருச்சன்னம் பூண்டி,* திருப்பராய்த்துறை, குடிமல்லம் முதலிய ஊர்க் கல்வெட்டுக்கள் இவனைப் பற்றிக் கூறுகின்றன.

இவனே 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்ற சிறப்புடையவன். புகழ் மிக்க 'நந்திக் கலம்பகம் நூல் இவ் வேந்தன் மீது பாடப் பெற்றதே.

பல இடங்களில் இவன் 'அவனி நாராயணன்' என்று குறிக்கப் பெற்றுள்ளான்.

இப்பொழுதுள்ள காவேரிப் பாக்கம் இவன் காலத்தில் 'அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்' என்னும் பெயரால் அழைக்கப் பெற்றது.

*S. I. I. Vol. VII No. 503

தமிழ் நாட்டுப் பெருவணிகன் ஒருவன், இவன் காலத்தில் 'சையாமில்' ஒரு குளம் அமைத்தான். அக் குளத்திற்கு 'அவனி நாரணன் குளம்' என்று பெயரிட்டான் என்பதை அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.

எனவே, மூன்றாம் நந்தி வர்மன் காலத்தில் கடல் வாணிபமும் சிறந்திருந்தது என்பதை அறிகிறோம். சிறந்த கடற்படையைப் பெற்றிருந்தான் என்பதை நந்திக் கலம்பகத்தால் அறிகிறோம்.

நல்லியல்புகள் பல பெற்றவன் என்பதை

'நாடுஅறநெறியில் வைக
நன்னெறி வளர்த்தான்'

எனச் சேக்கிழார்பெருமான் பெரிய புராணத்தில் குறித்திருப்பதிலிருந்து அறிய முடிகிறது.



செப்பேடுகளில் தெள்ளாற்றுப் போர்

வேலுர்ப் பாளையப் பட்டயத்தில்,

'கத்தியினால் கொல்லப்பட்ட யானையின் தந்தங்களிலிருந்து சிதறிய முத்துக்களின் ஒளியால் வெளுத்து நகைப்பதைப் போல் விளங்கிய போர்க் களத்தில், தன் புஜங்களில் பராக்கிரமம் என்ற மதத்தை உடையவனாய்ச் சத்துருக்களைக் கொன்று, வேறு யாராலும் அடைய இயலாத பல்லவ இராஜ்யத்தின் திருவை அடைந்தான்'[1]

என்ற செய்தி விளங்குகிறது.

பாரத வெண்பாவில் தெள்ளாறு

'வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள் உரிமையால் — திண்மையால்
தேர் வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார்வேந்தர் நிற்பார் எதிர்'

என்று பாரத வெண்பாவில் பெருந்தேவனார் சிறப்பித்துக் கூறுகிறார். தெள்ளாற்றுப் போரில் பல்லவன் வெற்றியை இப் பாடல் சுட்டுகிறது.

1. 'பல்லவர் செப்பேடுகள்' பக்கம் 260.

நந்திக் கலம்பகத்தில் தெள்ளாறு

நந்திக் கலம்பகம், மூன்றாம் நந்திவர்மனைப் புகழ்ந்துரைக்கும் சுவை மிகுந்த இலக்கியமாகும்.

தெள்ளாற்றுப் போரில், யானைப் படை, குதிரைப் படை பலவற்றைப் பகைவர் இழந்தனர். தெள்ளாற்றுப் போரில் பல்லவன் வெற்றி கண்டான்.[1]

தெள்ளாற்றுப் போரைக் குறிப்பிடும் நந்திக் கலம்பக வரிகள்:

